അർത്ഥപരമായ സന്നിഗ്ദ്ധതയാണ് വാക്യഘടനയിലെ മറ്റൊരുപ്രശ്നം. ഇതിനെ അർത്ഥതലം എന്നൊരു വിഭാഗമായി കല്പിക്കാമെങ്കിലും വാക്യഘടനയോടുബന്ധപ്പെട്ടു വരുന്നതിനാൽ ഇതിനെയും വാക്യഘടനാതലത്തിൽ ഉൾപ്പെടുത്തുകയാവും ഉത്തമം. അർത്ഥപരമായ എല്ലാ വ്യതിയാനങ്ങളും വാക്യഘടനയോടു ബന്ധപ്പെട്ടാണല്ലോ സംഭവിക്കുന്നത്. മൗനിയുടെ 'അഴിയാച്ചുടർ' എന്ന കഥയിലെ ഒരു വാക്യം നോക്കുക. "ആനാൽ എല്ലാം മായൈ എൻപതെ മട്ടും നിച്ചയമാക ഉണർത്താതു. 'മേലേ അതോ' എൻറു കാട്ടിയും നാം പാർത്തു അതൻ വഴിയേ പോകത്തെരിന്തുകൊള്ളു മുൻ മറൈയത്താൻ ഇന്ത ചുട്ടുവിരൽകൾ ഇരുക്കിൻറന". ഈ വാക്യം ആശയത്തെ പൂർണ്ണമായി വെളിപ്പെടുത്താതെ അർത്ഥത്തെ അവ്യക്തമാക്കുന്നു. ഇതിനെ മലയാളത്തിൽ ഇങ്ങനെ തർജ്ജമ ചെയ്യാം. "എന്നാൽ മായ എന്നതുമാത്രം തീർച്ചയായും വെളിപ്പെടുത്തിന്നില്ല. 'മുകളിൽ അതാ' എന്ന് ചൂണ്ടിക്കാണിച്ച് നാം അതുനോക്കി അതിന്റെ മാർഗ്ഗത്തിൽ സഞ്ചരിക്കാൻ തുടങ്ങുന്നതിനുമുൻപ് മറയാനാണോ ഈ ചൂണ്ടുവിരലുകൾ".

വിവർത്തകന് പ്രശ്നം സൃഷ്ടിക്കുന്ന മറ്റൊരു മേഖലയാണ് എഴുത്തുകാരന്റെ സംസ്കാരതലം. ഗ്രന്ഥകർത്താവിന്റെ സാമൂഹികവും, വൈയക്തികവുമായ സംസ്കാരത്തെ യാണ്

വിവർത്തകൻ ഇവിടെ നേരിടേണ്ടത്. ഇതു രണ്ടും വിവർത്തകനെ സംബന്ധിച്ചിടത്തോളം അന്യമാണ്. ഉദാഹരണത്തിന് തമിഴ്നാട്ടിൽ പ്രായവ്യത്യാസമില്ലാതെ സ്ത്രീകളെ അമ്മ എന്നു വിളിക്കാറുണ്ട്. കൊച്ചു കുഞ്ഞുങ്ങൾ മുതൽ മുതിർന്ന സ്ത്രീകൾ .വരെ ഈ ഗണത്തിൽപ്പെടും. തായ്കുലത്തിൽ ജനിച്ചവർ എല്ലാം തമിഴ്ജനങ്ങൾക്ക് തായ്മാരാണ്. ഇത് ജനങ്ങളുടെ സാമൂഹികസംസ്കാരത്തിന്റെ ഭാഗമത്രെ. എന്നാൽ മലയാളത്തിൽ എല്ലാ സ്ത്രീകളെയയും അമ്മ എന്ന് വിളിക്കാറില്ല. പ്രതാപമുതലിയാർ ചരിത്രത്തിൽ, കാട്ടിൽ അകപ്പെട്ട് ഒരു സന്ന്യാസിനിയുടെ സവിധത്തിലെത്തിയ കൗമാരപ്രായക്കാരിയായ ജ്ഞാനാംബാളോട് ആ സ്ത്രീ ഇങ്ങനെ പറയുന്നു. "നീ ആർ അമ്മാ ! ഉന്നെ പാർത്താൽ പരദേവതൈ പോലിരുക്കിറതേ". ഇവിടെ അമ്മക്ക് അർത്ഥം മകൾ എന്നാണ്. അതായത് തമിഴിലെ ഒരു അർത്ഥ സാഹചര്യത്തിൽ പ്രത്യക്ഷപ്പെടുന്ന 'അമ്മ' മലയാളത്തിൽ 'മകൾ' ആയി മാറുന്നു. "നീ ആരാണു മോളോ ! നിന്നെ കണ്ടാൽ പരദേവത പോലെ തോന്നുന്നല്ലോ!" എന്ന് ഈ വാക്യത്തെ വിവർത്തനം ചെയ്യാം. അതല്ലാതെ അമ്മയെ അമ്മയായി വിവർത്തനം ചെയ്താൽ തർജ്ജമ വികലമാകും.

മൂലകൃതിയുടെ കർത്താവിന്റെ വൈയക്തിക സംസ്കാരവും വിവർത്തനത്തിൽ ബുദ്ധിമുട്ടുകൾ സൃഷ്ടിക്കാം. ഉദാഹരണത്തിന് പ്രതാപമുതലിയാർ ചരിത്രത്തിൽ തന്നെ കഥ പറയുന്ന പ്രതാപമുതലിയാര്യ ജ്ഞാനാംബാളെപ്പറ്റി പ്രസ്താവിക്കുമ്പോൾ സ്ത്രീലിംഗ സർവ്വനാമത്തിനു പകരം പലപ്പോഴും അവളുടെ പേരാണ് ഉപയോഗിക്കുന്നത്. ഗ്രന്ഥ കർത്താവിന്റെ ഉയർന്ന വൈയക്തികസംസ്കാരസവിശേഷതയാകാം ഇത്. എന്നാൽ അടുത്തടുത്തുള്ള സംജ്ഞാനാമത്തിന്റെ ആവർത്തനം വിവർത്തനത്തിന്റെ പ്രസാദാത്മകത നശിപ്പിക്കാനേ ഉപകരിക്കുന്നുള്ളു.

വിവർത്തനത്തിൽ സർവ്വപ്രധാനമായി ശ്രദ്ധിക്കേണ്ട മറ്റൊരു കാര്യം അതിന്റെ കലാഭംഗിയാണ്. ഒരു സാഹിത്യകൃതിയുടെ ജീവൻ അതുണർത്തുന്ന സൗന്ദര്യബോധമാണ്. സൗന്ദര്യമില്ലാതെ പോയാൽ സാഹിത്യം നിർജ്ജീവമായിത്തീരും. മൂലകൃതിയുടെ രൂപഭാവങ്ങൾക്കും എഴുത്തുകാരന്റെ ആത്മസത്തക്കും കോട്ടം തട്ടാത്ത രീതിയിൽ സൗന്ദര്യാത്മകമായി വേണം ഒരു കൃതി അന്യഭാഷയിലേക്ക് മൊഴിമാറ്റം നടത്താൻ. ഈ സൗന്ദര്യം

ദീക്ഷിക്കാൻ അഥവാ നിലനിറുത്താൻ പല പരിഷ്കരണങ്ങളും വിവർത്തകന് ചെയ്യേണ്ടിവരും. മുൻഖണ്ഡികയിൽ സൂചിപ്പിച്ചതുപോലെ സംജ്ഞാനാമങ്ങൾക്കു പകരം സർവ്വനാമങ്ങൾ ഉപയോഗിക്കുക, ദീർഘ വാക്യങ്ങളെ ഹ്രസ്വമാക്കി മാറ്റുക, കർമ്മാണി പ്രയോഗങ്ങളെ കർത്തരി പ്രയോഗമാക്കുക, ക്ലിഷ്ട വാക്യങ്ങളെ ക്ലിഷ്ടതരമാക്കുക തുടങ്ങിയവയെല്ലാം ഇതിൽപ്പെടുന്നു. ഈ പ്രശ്നങ്ങളെയെല്ലാം അതിജീവിച്ച് രചിക്കപ്പെടുന്ന വിവർത്തനകൃതി തൊണ്ണൂറ്റഞ്ചു ശതമാനവും മൂലഗ്രന്ഥത്തിന് അനുഗുണമായിരിക്കും.

നിർഭാഗ്യവശാൽ വിവർത്തകനോ വിവർത്തനത്തിനോ വേണ്ടത്ര അംഗീകാരം ലഭിക്കുന്നില്ല എന്നതും വിവർത്തനകൃതികൾ രണ്ടാം തരമായി കണക്കാക്കപ്പെടുന്നു എന്നതും വിവർത്തനത്തെ ബാധിക്കുന്ന പ്രശ്നങ്ങളിൽപ്പെടുന്നു.

സാഹിത്യകൃതികളുടെ വിവർത്തനത്തിൽ ഉണ്ടാകുന്ന ക്ലേശങ്ങളെക്കാൾ അധികമാണ് അന്യഭാഷാ നിഘണ്ടുവിന്റെ നിർമ്മാണം. വിവർത്തനത്തിന് ഒരു മൂലഗ്രന്ഥകർത്താവും മൂലഗ്രന്ഥവും ഉണ്ടെന്നുള്ളതും വിവർത്തകൻ അതിന് അനുപദങ്ങൾ കണ്ടെത്തിയാൽ മതിയെന്നുള്ളതുമാണ് വിവർത്തനത്തിനുള്ള നേട്ടം. എന്നാൽ നിഘണ്ടു നിർമ്മാണത്തിന് അങ്ങനെയൊരു മൂലസ്രോതസ്സ് ഇല്ല. പ്രത്യേകിച്ച് മലയാളത്തിൽ മാതൃകയ്ക്കായിപോലും ഒരു തമിഴ് മലയാളം നിഘണ്ടുവോ മലയാളം തമിഴ് നിഘണ്ടുവോ ലഭ്യമല്ല. യഥാർത്ഥത്തിൽ വിവർത്തനവും നിഘണ്ടു നിർമ്മാണവും പരസ്പര പൂരകമായി വർത്തിക്കുന്ന മേഖലകളാണ്. വിവർത്തനം നിഘണ്ടു നിർമ്മാണത്തെയും നിഘണ്ടു വിവർത്തനത്തെയും സഹായിക്കുന്നു.

തമിഴ് മലയാളം നിഘണ്ടുവാണോ മലയാളം തമിഴ് നിഘണ്ടുവാണോ ഉണ്ടാകേണ്ടത് എന്ന കാര്യത്തിലും അഭിപ്രായവ്യത്യാസമുണ്ടാകാം. തമിഴ് പദങ്ങൾ ആദ്യം കൊടുത്ത് അതിന് മലയാളത്തിൽ അർത്ഥം നൽകുകയാണോ അതോ മലയാളപദം ആദ്യം നൽകി അതിന് അനുഗുണമായ തമിഴ്പദം രണ്ടാമത് കൊടുക്കുകയാണോ മലയാളത്തിൽ ഉണ്ടാകുന്ന ഒരു നിഘണ്ടുവിന് അഭികാമ്യം എന്നതാണ് ചോദ്യം. ഒരു തമിഴ് മലയാളം നിഘണ്ടുവിന്റെ രചനക്കു ശ്രമം നടത്തിക്കൊണ്ടിരിക്കുന്ന ഈ ലേഖകൻ നൽകിയിരിക്കുന്ന നാമം തമിഴ് മലയാളം നിഘണ്ടു എന്നാണ് മലയാളത്തിൽ ഇതുവരെ ഉണ്ടായിട്ടുള്ള പ്രധാനപ്പെട്ട എല്ലാ

അന്യഭാഷാനിഘണ്ടുക്കളും ഈ രീതിയാണ് അനുവർത്തിച്ചിട്ടുള്ളത്. മലയാള പദങ്ങൾക്ക് ഇംഗ്ളീഷ് അർത്ഥം നൽകുന്ന റിവേഴ്സ് ഡിക്ഷ്നറി മാത്രമേ ഇതിന് അപവാദമായിട്ടുള്ളൂ. തമിഴ് പദത്തിന്റെ ഉച്ചാരണം ആദ്യം മലയാളത്തിൽ എഴുതി ബ്രായ്ക്കറ്റിൽ അല്പം ചെറിയ അക്ഷരത്തിൽ അതേ പദത്തെ തമിഴിലും എഴുതുന്നു. തുടർന്ന് അതിന്റെ വ്യാകരണ സവിശേഷത ചുരുക്കെഴുത്തിൽ സൂചിപ്പിച്ചശേഷം അതിന് തുല്യമായ മലയാളപദവും ഇംഗ്ളീഷ് അർത്ഥവും നൽകിയിരിക്കുന്നു. ഗ്രന്ഥത്തിന്റെ വൈപുല്യത്തിന് കാരണമാകുന്നതുകൊണ്ട് ക്രിയാ ഡിക്ഷനറിയും മറ്റും നൽകുന്നതുപോലെ ഉദാഹരണ വാക്യങ്ങൾ നൽകിയിട്ടില്ല.

<u>ഉപസംഹാരം :</u>

ഇതുവരെ വിവരിച്ച കാര്യങ്ങളെ താഴെ പറയുന്ന രീതിയിൽ ക്രോഡീകരിക്കാം.

തമിഴിൽ നിന്ന് മലയാളത്തിലേയ്ക്കുള്ള സാഹിത്യ വിവർത്തനത്തിലെ പ്രശ്നങ്ങളെ ഭാഷയുടെയും സംസ്കാരത്തിന്റെയും സൗന്ദര്യശാസ്ത്രത്തിന്റെയും തലത്തിൽ വീക്ഷിക്കണം.

ഭാഷാതലത്തിലെ പ്രശ്നങ്ങൾ സ്വനിമം, രൂപിമം, വാക്യം എന്നിങ്ങനെ മൂന്നു രീതിയിൽ പ്രത്യക്ഷപ്പെടുന്നു.

തമിഴിലെ സ്വനിമഘടന ഫ്ളാറ്റും മലയാളത്തിലേത് കോൺക്രീറ്റുമാണ് എന്നതാണ് ആദ്യത്തെ പ്രശ്നം.

രൂപിമ തലത്തിൽ സാങ്കേതിക പദങ്ങൾ, സ്വകീയപദങ്ങൾ എന്നിവയുടെ വിവർത്തനത്തിലാണ് ബുദ്ധിമുട്ടുണ്ടാകുന്നത്. സാമൂഹിക സംസ്കാരത്തോടു ബന്ധപ്പെട്ട ഭാഷാപദങ്ങളും വിവർത്തനത്തിന് ആയാസം സൃഷ്ടിക്കുന്നു.

വാക്യഘടനാതലത്തിൽ സങ്കീർണ്ണവാക്യങ്ങളും വിഷേണ പരിച്ഛദങ്ങളും അർത്ഥ സന്നിഗ്ദ്ധതയും വിവർത്തനത്തിന് ബുദ്ധിമുട്ടുണ്ടാക്കുന്നു.

എഴുത്തുകാരന്റെ സാമൂഹികവും വ്യക്തിപരവുമായ സാംസ്കാരികഭേദമാണ് തർജ്ജമയിലെ മറ്റൊരു പ്രശ്നം.

മൂലകൃതികളുടെ സൗന്ദര്യാത്മകത പരമാവധി നിലനിറുത്തേണ്ടി വരുന്നതും വിവർത്തനത്തിന് തടസ്സം സൃഷ്ടിക്കുന്നു.

വിവർത്തകനോ വിവർത്തനത്തിനോ വേണ്ടത്ര അംഗീകാരം ലഭിക്കുന്നില്ല എന്നതും ഭാഷാന്തരീകരണത്തിന്റെ പ്രശ്നങ്ങളിൽ ഒന്നാണ്.

അന്യഭാഷാ നിഘണ്ടുവിന്റെ നിർമ്മാണം വിവർത്തനത്തെക്കാൾ സങ്കീർണ്ണമാണ്.

നിഘണ്ടു നിർമ്മാണത്തിന് മൂല സ്രോതസ്സ് ഇല്ലെന്നതാണ് പ്രാധാനപ്രശ്നം.

വിവർത്തനവും നിഘണ്ടു നിർമ്മാണവും പരസ്പര പൂരകമായി വർത്തിക്കുന്നു.

മലയാളത്തിൽ ഉണ്ടാകേണ്ടത് തമിഴ് മലയാളം നിഘണ്ടുവാണോ അതോ മലയാളം തമിഴ് നിഘണ്ടുവാണോ എന്നതും ചിന്തനീയമാണ്.

தமிழ் நூல் சொல்லடைவுகள் - மதிப்பீடும் மேம்பாட்டிற்குச் சில கருத்துரைகளும்

கி. நாச்சிமுத்து

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியை உருவாக்கிக் கொண்டிருந்தபோது பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் தமிழில் வரலாற்றுமுறை அகராதியைத் தொகுக்கவும் வரலாற்று இலக்கணம் எழுதவும் ஒவ்வொரு காலகட்டங்களிலும் தோன்றிய நூல்களிலுள்ள சொற்களை அடைவு செய்ய வேண்டியதன் தேவையை உணர்ந்திருந்தார். சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியைத் தொகுக்கும்போது இத்தகைய சொல்லடைவுகளை முறையாகத் தொகுத்திருக்கவில்லை. தமிழ் நிகண்டுகளிலுள்ள சொற்களுக்கு மட்டும் ஓரடைவு தயாரிக்கப்பட்டதாகப் பேரகராதி முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார் (பக்கம் 11). பின்னர் அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சித் துறையில் இருந்தபோது சங்க நூல் முதலிய பழந்தமிழ் நூல்களுக்குச் சொல்லடைவுகள் தயாரித்து வந்ததாகத் தெரிகிறது. அவர் கேரளப் பல்கலைக் கழகத்தில் (1952-54) இருந்த காலத்தில் தாம் முன்பு தயாரித்த பழந்தமிழ் நூல் சொல்லடைவுகளைச் செப்பம் செய்தும், புதிய நூல்களுக்குச் சொல்லடைவு தயாரித்தும் அம்முயற்சியைத் தொடர்ந்தார். அவருக்குப் பின் பதவியேற்ற பேராசிரியர் வ. ஐ. சுப்பிரமணியம் 1954-இல் சங்கத்தொகை நூல் சொல்லடைவுத் திட்டத்தை மேற்கொண்டு சொல்லடைவுகளுக்கு வடிவம் கொடுக்கத் தொடங்கினார். இதனிடையில் அவர்கள் அமெரிக்கா சென்று மொழியியல் கற்று வந்தார். அவரும் சொல்லடைவு மாதிரிகளை மொழியியல் அறிஞர் பலருக்கும் அனுப்பிக் கருத்துரைகள் பெற்று அதனடிப்படையில் பணி மேற்கொண்டார். முதலில் அவருடைய புறநானூற்றுச் சொல்லடைவு(1962) வெளிவந்தது. அவருடைய மேற்பார்வையில் தமிழில் பல நூல்களுக்குச் சொல்லடைவுகளும் இலக்கணமும் தயாரிக்கப்பட்டன.

இதே காலத்தில் சென்னை, அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் தெ.பொ. மீ. மேற்பார்வையிலும், இன்னும் சிலவிடங்களில் சிலர் முயற்சியாலும் இத்தகைய முயற்சிகள் நடந்துவந்தன. இன்று இதன் விளைவாக சுமார் 150-க்கும் மேற்பட்ட சொல்லடைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தமிழ்மொழி இலக்கண ஆராய்ச்சியில் பாதிக்குமேலும், தமிழ் ஆராய்ச்சியில் மூன்றில் ஒருபாகமும் இத்தகைய முயற்சியே மேலோங்கியிருந்தது என்று கூறலாம். தமிழ் ஆய்வு என்றாலே சொல்லடைவு அடைவு என்று நகையாடிய காலமும் இருந்தது. எனினும் இதுபற்றி வரலாற்று முறையிலும் நோக்கம் மதிப்பீடு முறைகள் பயன் முதலியவற்றின் அடிப்படையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இங்கு அத்தகைய மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இத்துறையில் செய்யவேண்டிய செப்பங்களை எடுத்துரைக்கிறது இக்கட்டுரை. இது (1)சொல்லடைவு போன்ற தொகுப்புகளின் பொது அமைப்பு (2) தமிழ்ச் சொல்லடைவுகள் பற்றிய ஒரு வரலாறு (3) தமிழ்ச் சொல்லடைவுகள் பற்றிய மதிப்பீடு (4) சொல்லடைவுகளைச் செப்பம் செய்து இனி மேற்கொள்ளவேண்டிய அமைப்பு பற்றிய கருத்துரை என்ற முறையில் அமையும்.

பொருள் விளக்க அகராதிகள் (Exegetic Dictionaries)

ஒரு நூலினகத்து வரும் சொற்களுக்குப் பொருளறியத் தொகுக்கும் அகராதிகள் பொருள் விளக்க அகராதிகள் என அழைக்கப்படுகின்றன.

இத்தகைய அகராதிகள் ஒரு குறிப்பிட்ட நூலுக்கோ ஆசிரியருக்கோ மட்டும் அமையலாம். அல்லது ஒராசிரியரின் பல நூல்களுக்கோ, பல ஆசிரியர்களின் படைப்புக்களுக்கோ பொதுவாகவும் அமையலாம். இத்தகைய அகராதிகள் பல முறைகளில் தொகுக்கப்படுகின்றன.

1. க்ளோசரீஸ், இன்டெக்ஸஸ் (சொல்லடைவுகள்)

தேர்ந்து எடுத்துக்கொண்ட நூல் அல்லது நூல்களிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் பொருள் எழுதி அவை வருமிடம் எடுத்துக்காட்டுகள் முதலியவற்றுடன் தொகுப்பதே பெரும்பான்மை. சிலவேளை சொற்கள் முதல் முறையும் இறுதி முறையும் வருவது மட்டும் குறிக்கப்படும். சில தொகுப்புக்களில் சொற்களின் வருகை எண்ணிக்கையையும் தொகுத்துக் கொடுப்பதுண்டு. இத்தொகுப்புக்கள் அகராதி வரிசையில், அகராதி அமைப்பில் அமைவதுடன், வேறு தொடர்புடைய செய்திகளையும் தன்னகத்துக் கொண்டிருப்பதுண்டு. இயற்பெயர்களும் இதில் விடாது தொகுக்கப்படும். சிலவேளை சொற்கள் அகரவரிசைப் படுத்தப்பட்டு வருமிடம் மட்டும் சுட்டப்பட்டிருக்கும். புலவர்களின் சொல்லாட்சியை அறியவும், சொற்பொருள் மாற்றத்தை ஆராயவும், வரலாற்றகராதி தொகுக்கவும் இத்தகைய அகராதிகள் பயன்படும். இவற்றை ஆங்கிலத்தில் லெக்சிகன், க்ளோசரி, இன்டெக்ஸ் என்றெல்லாம் வெவ்வேறு முறையில் அழைக்கின்றனர். தமிழில் இவை அருஞ்சொல்லகராதி, அகராதி, சொல்லடைவு என்றெல்லாம் கூறப்படுகின்றன.

2. கன்கார்டன்ஸ் (Concordance)

இத்தகைய அகராதியைப் போன்ற இன்னொன்று சொல்லிருப்பிசைவு என்றும் ஒத்தவாக்கிய அகராதி என்றும் தமிழில் கூறப்படும் கன்கார்டன்ஸ் ஆகும். இவற்றில் சொற்கள் வருமிடம் எடுத்துக்காட்டுக்களுடன் வரன்முறையாகத் தொகுக்கப்பட்டிருக்கும். இங்கு சொற்பொருள் இடம் பெற்றிருக்காது. இதனால் ஒரே மாதிரியான சொல்லும் கருத்தும் உள்ள பகுதிகளை ஒன்றாகக்காண இயலும். இத்தகைய ஒப்புமைப்பகுதிகள் மூலபாட ஆய்வு, சொற்பொருளாராய்ச்சி போன்றவற்றிற்கு உதவும்.

3. பொருளடைவுகள்

சொற்பொருள் விளக்கத்திற்குப் போலவே நூற்பொருள் ஆராய்ச்சி முதலியவற்றிற்கு உதவ நூற்பொருளை அடைவு செய்வதுண்டு. இவை ஸப்ஜெக்ட் இன்டெக்ஸ் அல்லது பொருளடைவுகள் எனப்படுகின்றன. இவை சொற்களின் அகரவரிசையிலும் அமையலாம் (சுந்தரமூர்த்தி: பரிமேலழகர் உரைத்திறன்). அல்லது குறிப்பிட்ட பொருள் பாகுபாட்டிலும் அமையலாம் (மு. கோவிந்தசாமி,திருக்குறட்பொருளகராதி).

தமிழில் சொல்லடைவுகள் முதலியன

முதல்வகை அகராதிகளுக்கு டிக்ஸனரி ஆப் தீ அடா பையாகிரபி ஆப் கோர்க்கி, டிக்ஸனரி ஆப் ஷேக்ஸ்பியர் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

நாலாயிரத் திவ்வியப்பிரபந்த அகராதிகள், தமிழ் பைபிள் அகராதிகள், போப்பின் குறள் அகராதி, சாமிவேலாயுதம் பிள்ளையின் திருக்குறட் சொல்லடைவு முதலியன தமிழில் எடுத்துக்காட்டுகளாகும். உ. வே. சா. பதிப்புக்களிலுள்ள பிற்சேர்க்கைகளாக அமையும் அரும்பத முதலியவற்றின் அகராதிகள் இவ்வகையினவே. கேரளப் பல்கலைக் கழகத்தும் பிறவிடத்தும் தயாரிக்கப்பட்ட சொல்லடைவுகள் இப்பிரிவினவே. ஆனால்

இவற்றின் அமைப்பில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

1. சொற்கள் முதலியவற்றைத் தொகுத்து அகரவரிசையில் வருமிடம் சிலவற்றுடன் மட்டும் கொடுப்பவை. எ.டு. புதுச்சேரி பழந்தமிழ் நாற் சொல்லடைவு.
2. சொற்கள் முதலியவற்றைத் தொகுத்து அகரவரிசைப்படுத்திப் பொருளுடன் வருமிடம் சிலவற்றைத் தொகுத்துக் கொடுப்பவை. எ.டு. சங்க இலக்கியச் சொற் களஞ்சியம்.
3. இரண்டாவது பிரிவைப்போன்று அமைந்து வருமிடம் முழுமையும் தொகுப்பவை - விடாது எல்லாச் சொற்களும், இதில் அமையும். எ.டு. திருக்குறட் சொல்லடைவு, கேரளப் பல்கலைக்கழகச் சொல்லடைவுகள் முதலியன.
4. தொகுத்த சொற்களை அகராதி அமைப்பில் அடிச்சொல்லைப் பதிவாகக்கொண்டு பிற விகற்ப வடிவங்களை வரிசைப்படுத்திக்கொடுப்பது. எ.டு போப்பின் குறள் அகராதி.
5. சிலவகைச் சொற்களை (எ.டு பெயர்ச் சொற்கள்) மட்டும் உள்ளடக்கியவை. எ.டு. பல்லவருக்கு முற்பட்ட அடைவு (ப்ரீ-பல்லவன் இன்டெக்ஸ்).

சொல்லிருப்பிடைவு, ஒத்தவாக்கிய அகராதி (Concordance)

ஜி.யு. போப்பும், வேலாயுதனாரும் தம் அகராதிகளை மேற்கண்ட பெயரிலும் அழைத்துக் கொள்கின்றனர். ஆனால் அவை முற்ற முழுக்க அவ்வாறு அமையவில்லை. சிலவிடங்களே அவ்வாறு அமைகின்றன. தமிழ் பைபிளுக்கு இத்தகைய முயற்சி காணப்படுகின்றது. உ. வே. சா. அரும்பத அகராதியில் இக்கூறுகள் அடங்கியுள்ளன. வ. சு. செங்கல்வராய பிள்ளையின் தேவார ஒளிநெறி வரிசையும் பொருளடையும், ஒத்தவாக்கிய அகராதியுமாய் அமைகிறதெனலாம். சங்க இலக்கியத்திற்கு இம்முறையில் கணிப்பொறி உதவியுடன் திரு. பன்னீர் செல்வம் கோபன் ஹேகனில் தொடங்கிய முயற்சி முற்றுப்பெறாதது வருந்தத்தக்கது.

பொருளடைவில் குறள், சிலம்பு முதலியவற்றிற்குச் சில நூல்கள் தோன்றியுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சங்கநூற்களஞ்சியம் இங்கு நினைக்கத்தக்கது. இங்கு இதுபற்றி ஆராயவில்லையாதலால் விரிவாகப் பேசவில்லை.

பயன்கள்

இத்தகைய தொகுப்பு நூல்கள் கருவிநூல்வகையைச் சேர்ந்தவையாகும். ஆராய்ச்சியை மாளிகை என்றால் இவை நிலத்தடியில் மறைந்து கிடக்கும் மாளிகையின் அடிப்படைகளாகும் என்ற கருத்துப்படக் கூறுவார் உ. வே. சா. (என் சரித்திரம், பக்கம் 276) என்றால் இவற்றின் இன்றியமை யாமையை விளக்கவேண்டியதில்லை. தமிழில் இத்தகைய கருவிநூல்கள் அதிகம் தோன்றாமையாலேயே தமிழ் ஆராய்ச்சி செப்பமும் திட்பமும் பெறாமல் உள்ளது எனலாம். இத்தகைய நூல் தொகுப்பை மேற்கொள்ளாமல் தமிழாய்வாளர் புறக்கணித்து வந்தமைக்கு அறியாமையும் சோம்பலுமே காரணமாகும். சொல்லடைவுகள் முதலியன 1. மூலபாட ஆய்வு - பதிப்புக்கலை 2. சொற்பொருள் ஆய்வு - அகராதியியல் 3. இலக்கண ஆய்வு - மொழியியல் 4. இலக்கிய ஆய்வு - நடையியல் 5. பண்பாட்டு ஆய்வு முதலியவற்றிற்கு அடித்தளமாக விளங்குகின்றன.

தமிழ்ச் சொல்லடைவுகள் முதலியன பற்றிய வரலாறு

1. கி. பி. பதினேழாம் நூற்றாண்டளவில் வைணவ மரபில் திருநாலாயிரத்திலும்,

அதன் உரைகளிலும் வரும் அருஞ்சொற்களைப் பொருளுடன் தொகுத்த முயற்சிகள் காணப்படுகின்றன,

நாலாயிரத் திவ்வியப் பிரபந்த அகராதி, பார்த்தசாரதி ஐயங்கார் ஸ்ரீரங்கம் தேவஸ்தானப் பத்திரிகை வெளியீடு, 1963 பக்கம்835 .

திவ்வியப்பிரபந்த அகராதி, இராமகிருஷ்ண ஐயங்கார். டி., சென்னைக்கீழ்திசைச் சுவடி நூல்நிலையம், 1961, பக்கம் 4+3+186. மேலும் பார்க்க அ. தாமோதரன், தமிழ் அகராதிகள் ஒரு நூலடைவு, எண். 526, 528

2. கி. பி. 19, 20ஆம் நூற்றாண்டில் தமிழ் பைபிளில் காணப்படும் சொற்கள், தொடர்களுக்கு அகராதிகளும், சொல்விருப்பிசைவுகளும் தோன்றியுள்ளன. எடு வேத அகராதி, கினேட்டன், ஆல்பர்ட், சி., சி.எல். எஸ், சென்னை, நான்காம் பதிப்பு, 1963, பக் 8+980 , டத்தோயர் டி. ஏ., பெஞ்சமின் எல். டி.

தமிழ் வேதாகம ஒத்தவாக்கிய அகராதி (எ கன்கார்டன்ஸ் டு தி தமிழ் பைபிள்) முதல் தொகுதி 1943, பக்கம் 204, இரண்டாம் தொகுதி 1951, பக்கம் 453, சி. எல். எஸ்., சென்னை, மேலும் பார்க்க, தாமோதரன் 511-523).

உ. வே. சாமிநாதையர் இத்தகைய பைபிள் அகராதிகள் சொல்லிருப் பிசைவுகளைப் பார்த்தும் அதனால் அவர் இத்தகைய முயற்சிகளைத் தம் பதிப்புகளில் மேற்கொண்டதும் இங்கு குறிக்க வேண்டிய செய்திகளாம் (என் சரித்திரம் 723 - 724).

3. உ. வே. சா. அவர்கள் இத்தகைய அகராதிகளைத் தொகுத்துத் தம் பதிப்புக்களில் பின்னிணைப்பில் கொடுத்துள்ளார். புறநானூறு(1894) முதற்பதிப்பிலிருந்து இம்முயற்சிகளை மேற்கொண்டார். இதற்கு முன் ஜி. யு போப் நன்னூல்(1857) திருக்குறள்(1886) முதலியவற்றிற்கு இத்தகைய அடைவுகளைத் தயாரித்திருந்தார். பின் குறளுக்கும், சங்கநூல்களுக்கும் இத்தகைய சொல்லடைவுகள் தோன்றின. இன்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், தேவாரம், திருவாசகம், திருநாலாயிரம், சிலம்பு, மேகலை, பெரியபுராணம், பெருங்கதை, வில்லிபாரதம், கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி போன்ற இடைக்கால நூல்கள், கல்வெட்டுகள், தாயுமானவர், வள்ளலார் பாடல்கள், சில நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், பள்ளு, குறவஞ்சி, தமிழ் இலக்கண நூல்கள், பாரதி பாடல்கள், தற்கால நாவல், சிறுகதைகள் போன்ற சுமார் 150 நூல்களுக்கு இத்தகைய சொல்லடைவுகள் முதலியவை தோன்றியுள்ளன. ஒரே நூலுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட அடைவுகளும் காணப்படுகின்றன. விரிவஞ்சி இவற்றை இங்கு விவரிக்கவில்லை. சங்க இலக்கியம், காப்பியங்கள், இலக்கண நூல்கள், பிற்கால நூல்கள் முதலியவற்றிற்குக் கேரளப் பல்கலைக்கழகத்திலும், பதினெண் கீழ்க்கணக்கு, கல்வெட்டு, பக்தி இலக்கியம் முதலியவற்றிற்கு அண்ணாமலையிலும் சொல்லடைவுகள் சிறப்பாக எழுந்துள்ளன.

தமிழில் இத்தகைய முயற்சிகள் எழக்காரணம்

உ. வே. சா. இத்தகைய முயற்சிகளைத் தம் மூலபாட ஆய்விற்குக் கருவியாகக் கொண்டார். பேராசிரியர் வையாபுரிபிள்ளை, வ. அய். சுப்பிரமணியம், தெ.பொ.மீ. போன்றோர் இவற்றை அகராதித்தொகுப்பு இலக்கண ஆய்வு முதலியவற்றிற்குத் துணையாகக் கொண்டார்கள். சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி வெளியாகியபோது சங்கநூல்கள் அத்தனையும் வெளியாகவில்லை. வெளியான நூல்களிலும் பொருள் முழுதும் விளங்கவில்லை. எனவே சங்க நூல்களைத் தெளிவாக அறிய அது உதவுவது அருமையாகியது. மேலும் அது அடிச்சொற்களை மட்டும் தருகிறது. சங்க நூல்களில்

வரும் ஒரு சொல்லின் விகற்ப வடிவங்களை எல்லாம் தொகுத்துத் தருகிற அகராதி ஒன்று இலக்கண ஆய்விற்கும் மொழி வரலாற்றிற்கும் பெரிதும் உதவும் என்ற கருத்தைத் தெ. பொ. மீ. தெரிவிப்பது இவை எழுந்த சூழலைவிளக்கும் (சங்க இலக்கியச் சொற்களஞ்சியம், முன்னுரை)

தமிழ்ச் சொல்லடைவுகள் பற்றிய மதிப்பீடு

வைணவ அகராதிகளுக்கு மாதிரி : இராமகிருஷ்ண ஐயங்கார். டி.(பதிப்பு), திவ்விய பிரபந்த அகராதி, 1961, சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூல் நிலையம்.

தமிழகராதி என்ற பெயரில் காணப்பட்ட இரண்டு ஏட்டுச் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு இது பதிப்பிக்கப்பட்டது. திவ்வியப் பிரபந்தங்களுடையவும் வியாக்கியானங்களுடையவும் பொருளைக் காண்பிப்பதில் நோக்கம் கொண்டுள்ளதால் இவற்றிற்கு மேற்கண்ட பெயரை நூல்நிலையத்தார் சூட்டி வெளியிட்டுள்ளனர்.

முதலில் அகரமுறையின்றித் தொடங்கிப் பின் அகரமுறையில் முதலெழுத்தளவில் மட்டும் காணப்படுகின்றது. திவாகரம் முதலிய நிகண்டுகளின் துணைகொண்டு பல அருஞ்சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் சில அரிய சொற்களும் அரிய பொருள்களும் காணப்படுகின்றன. இதில் வடசொற்கள் அதிகம் இல்லை; தமிழ்ச்சொற் பொருளை வடசொல் கொண்டு விளக்குவது காணப்படுகின்றது.

சில இடங்களுக்கு எடுத்துக்காட்டுகளும் உள்ளன.

தொழிற்பெயர், வினையெச்சம், பெயரெச்சம், தொடர்கள் முதலியன பதிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பொருள் கூறுமிடத்து ஒருபொருட்பன்மொழியாக மட்டுமின்றி விளக்க முறையும் காணப்படுகிறது.

பதிப்பாசிரியர் புதிதாகச் சேர்த்த சொற்கள் உடுக்குறியிட்டும், புதிய பொருள்களும், எடுத்துக்காட்டும் பகர வளைவிட்டும் காட்டப்பட்டுள்ளன.

எ.டு. அகம் - சித்தம், நெஞ்சு, உள், இடம், விலக்ஷணதாந்யம், பாபம், மரம், மலை, நான் (அகம் வகுத்துக்கொண்டிருந்தேன்; பெரியாழ்: 5.1.5), ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு, வயிறு (அகனாரவுண்பனென்றுண்டு; 2-ஆம் திருவந். 22)

அசல் - அன்னியம்

அசல் பிளந்தேறிடுகை - ஒரு மரத்தைப் பிளந்து தெரியாதபடி மற்றொன்றையதில் ஏறிடுகை; அந்யத்ர(மற்றோரிடம்) பெயர்ந்தேறும்படி பண்ணுகை(ஈடு. 1.3.8 அர்ச்சிராதி 1 ப்ரகரணம்)

அசலிட்டு - வேறுபடுத்தி

அசலிடுகை - ஈஸ்வரனைவிட்டுச் சரமாவதியிலே போகை

அசைவற - பயம் இல்லாமல்

அசைவிக்கை - பின்னிட்டோடப் பண்ணுகை

அரைகுலையத்தலைகுலைய - அவசர அவசரமாக (உணர்ச்சியற்று வந்து விழுந்தான், ஈடு. 3.1.10)

அரைத்தொடர் - இடையிற்பூணும் அரைஞாண் சங்கிலி

அவனோட்டை - அவனோடு(அவனோட்டையனாவத்திற்கு . ஈடு)

அமலன் - தலையோடே என்ற பதிவில் ஒரு கதையே விளக்கமாகக் கூறப்படுகிறது

செந்தமிழ் - ஸ்வாப்த்த ப்ரகாசகமான தமிழ்(பொருளைச் செம்மையாக அளிக்குந்தமிழ்)

மேல்நாட்டுத் தொடர்பிற்கு முன்பே இத்தகைய கருவி நூல் முயற்சி இருந்தது குறிப்பிடத்தக்கது. வைணவ உரை மரபில் அகராதி, மேற்கோள் விளக்கம் முதலிய துறைகளில் புதிய முயற்சிகள் காணப்படுகின்றன. தமிழாய்வாளர் இதன் வரலாற்றை ஊன்றி ஆராயவேண்டும்.

ஜி. யு. போப்பின் குறள் நாலடி லெக்சிகனும் கன்கார்டன்சும்(1866)

ஜி.யு போப்பின் குறள் மொழிப்பெயர்ப்பின் பின்னிணைப்பாக(பக்கம்75) இது இடம் பெறுகிறது. இதில் குறளிலுள்ள எல்லாச் சொற்களும் நாலடியிலுள்ள சில சொற்களும் இடம் பெறுவதாகக் கூறப்படுகிறது. தலைப்புச் சொல் தமிழ் எழுத்தில உள்ளது. தொடர்ந்து பொருள் ஆங்கிலத்திலும் பின் வருமிடங்களும் சுட்டப்படுகின்றன. சில சொற்களுக்கு வடமொழிச் சொல்லொப்புமையும், ஒரு பொருட் பல சொற்களும் காட்டப்படுகின்றன.

பெயர்கள், வினையடிகள், வேற்றுமையுருபுகள், இடைச்சொற்கள் போன்றவை பதிவுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. வினைச் சொற்களின் பகுதிகள் பதிவாக அமைகின்றன. பிறைக்குறிக்குள் அதன் வினைத்திரிபுகள் பற்றிய செய்தியை விளக்கும் அவருடைய தமிழிலக்கணக் கையேட்டின் பத்தி எண்கள் குறிக்கப்படுகின்றன

வினையடியின்கீழ் வினை விகற்பங்கள் எல்லாம்(எச்சம், முற்று, தொழிற்பெயர முதலியன) பத்தியாக அமைக்கப்படுகின்றன. இதை வரிசைப்படுத்துமமுறை எல்லாப் பதிவிலும் ஒருபோல இல்லை. எனினும் முதலில் வினைத்தொகையடி, முற்றுவினை, எச்சம், எதிர்மறை, தொழிற்பெயர்கள், பிறவினைகள் என்ற முறையில(எ.டு அறி) அமைவதாகத் தோன்றுகிறது. இணைச் சொற்களும் காட்டப்படுகின்றன.

பெயர்ச்சொற்களின் கீழ் அவை வேற்றுமை ஏற்ற வடிவங்களும் பிறவும்(எ.டு அது) காட்டப்படும். அவை பெயர் என்று பெரும்பாலும் சுட்டப்படும்.

சொற்களின் வருமிடங்கள் பெரும்பாலும் சுட்டப்பட்டுள்ளன வருமிட எண்கள் ஏறுவரிசையிலன்றி முறைமாறியும் உள்ளன. (எ டு. அவன்). அடிகளின கீழ் விகற்பங்களை அமைப்பதில் அகரவரிசை முறையும் இல்லை. அடிகளின் கீழ்த் தொடர்புடைய பிற சொற்களும் காட்டப்படுகின்றன(எ.டு. அது, இது) இவற்றில வரும் சொற்கள் சிலவேளை(எ.டு அச்சம்) தனித்தும் அகரவரிசையில் சுட்டப்படுவதுண்டு(கொடிது - கொடு). சொற்பொருள் ஒவ்வொன்றும் இடத்திற்கேற்பத் தனித்தனி வரையறுக்கப்படாமல் பொதுநிலையில் வரையறுக்கப்பட்டதுபோல் தோன்றுகிறது.

இது ஒருவகையில் குறள் அகராதியாகவும் சொல்லடைவாகவும் விளங்குகிறது. சில இடங்களிலன்றி இதை முழுச் சொல்லிருப்பிசைவு என்ற கூற இயலாது

சில இடங்களில் சொற்பொருள் விளக்கத்திற்கு ஒப்புமைச் சொற்கள், தமிழ, வடமொழிகளிலிருந்து காட்டப்படுகின்றன. இது போன்று இவருடைய தன்னூல் அடைவும் ஒப்பிட்டு நோக்கற்பாலது.

சாமி வேலாயுதனார் திருக்குறட் சொல்லடைவு

1952-இல் சாமி வேலாயுதம் பிள்ளை தம் பத்தாண்டுக்கு மேற்பட்ட உழைப்பால் வெளியிட்ட நூலே திருக்குறட் சொல்லடைவு. இந்நூலை அவர் திருக்குறட் பேரகராதியும்(லெக்சிகன்) சொல்லிருப்பிசைவும்(கன்கார்டன்ஸ்) என்றும் அழைப்பார். இவ்வகையில் இதுவே முதல் நூல் என்பார் ஆசிரியர்.

திருக்குறளுக்கு முதலில் இத்தகைய அகராதியும் சொல்லிருப்பிசைவும் ஜி. யு. போப் 1886 இல் வெளியிட்டார். பின் 1824 இல் சென்னை வா. மார்க்க சகாயஞ்செட்டியார் திருக்குறட் சொற்குறிப்பகராதியை வெளியிட்டார். இதை விரிவாக்கிக் கழகம் 1969 இல் திருக்குறள் சொற்பொருள் அகரவரிசை வெளியிட்டது. இதில் பொருள் கூறப்படவில்லை. 1961 இல் ந. சி. கந்தையாபிள்ளை திருக்குறள் அகராதி என ஒன்று வெளியிட்டார். அது அளவில் சிறியது திரு. சுந்தரசண்முகனாரும் இத்தகைய அகராதி ஒன்று தயாரித்துக் கைச்சுவடியாக வைத்திருப்பதாகத் தோன்றுகிறது. மேலும், திருமதி. பரமேஸ்வரி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம். லிட் பட்டத்திற்காக 1961 இல் திருக்குறள் சொல்லடைவு (இலக்கணத்துடன்) தயாரித்துள்ளார். இதுபோன்று 1966 இல் திரு. அ. தாமோதரன் கேரளப்பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டத்திற்காகச் சொல்லடைவு(டாக்மாமிக் இலக்கணத்துடன்) தயாரித்துள்ளார். திரு. ஜேம்ஸ் திருக்குள் சொல்லடைவும் மணக்குடவர் அகராதியும் என்பதைத் தம் எம். பில்லுக்கு 1982 ல் கேரளப் பல்கலைக்கழகத்தில் தொகுத்துள்ளார். இதில் பொருள் மணக்குடவர் வழி கூறப்பட்டுள்ளது. திரு. ந. சஞ்சீவி அவர்கள் திருக்குறள் சொற்பயில் முறை அகராதி ஒன்றும் திரு. மு. சண்முகம்பிள்ளை திருக்குறள் சொல் விளக்க அடைவு ஒன்றும் தொகுத்திருப்பதாகத் தெரிகிறது.

1986-இல் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு சொல்லடைவை வெளியிட்டுள்ளது.

சாமி வேலாயுதனார் சொல்லடைவு போப் மார்க்கசகாயஞ் செட்டியார் ஆகிய இருவர் நூல்களிலும் விடுபட்டுள்ள சொற்கள் இருப்பிடங்கள் முதலியவற்றைச் சேர்த்து மிக விரிவாகவும் முழுமையாகவும் செம்மையாகவும் யாக்கப்பட்டுள்ளது. இதில் குறளில் வரும் 4310 சொற்கள்(அடிச் சொற்கள், விகற்ப வடிவங்கள், விகுதிகள் முதலியன) அடங்கியுள்ளன.

இதன் அமைப்பையும் பயனையும் ஆசிரியரே கூறுவதை இங்குக் காட்டலாம்:

"(குறளில்) கையாளப்பெற்றுள்ள சொற்களை எல்லாம் பிரித்தெடுத்து, அகரவரிசைப்படுத்தி ஒவ்வொரு சொல்லின் வரன் முறையையும்(derivation) (குறிப்பு : திருவள்ளுவர் காலத்தில் வடசொற்களே வேற்று மொழிச் சொற்களாதலின் அவற்றின் அடியமும்(ரூட்ஸ்) ஒலிக்குறிப்பும் கொடுக்கப்படுகின்றன) பகுபதவுறுப்புக்களையும் விளம்பியதுடன் அது எவ்வெவ் இலக்கியங்களில் எவ்வெப்பொருள்களுடன் எவ்வெத்திருக்குறள்களில் வந்துள்ளது என்பன இந்நூலில் விடாது குறிக்கப்படுகின்றன. அதேசொல் வேறு எச்சொல்லுடனாவது முன்னோ பின்னோ சேர்ந்து வேறு தொடரிலக்கணங்களுடனும் புதுப் பொருள்களுடனும் வழங்கப்பட்டிருப்பின் அம்மரபும் தொடரிலக்கணமும், கூட்டுச்சொற்களின் பகுபதவுறுப்புகளும் தவறாது விளக்கபடுகின்றன (கண் எனுஞ்சொல் 11 தனியிலக்கணத்தில் 12 பொருள்களுடனும் 8 தொடரிலக்கணத்தில் 8 வகைப் பகுபதவுறுப்புக்களுடனும் 15 பொருள்களுடனும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்). இடை உரிச்சொற்களும் அவை தொக்கு நிற்கும் இடங்களும் தேடித்தொகுக்கப்பட்டு அவற்றின் இலக்கணக் கூறுபாட்டிற்கேற்பவும், பொருளிற்கேற்பவும் வரிசைப்படுத்தி வருமிடங்கொடுக்கப் படுகின்றன(சிறப்பாக 48, 49, 67-69 ஆம் பக்கங்களில் உம், ஐ, எனும் சொற்களின் கீழ்க்காண்க). இங்ஙனம் திருக்குறட் சொற்கள் எவ்வெவ்வகையில் எவ்வெத்திருக்குறளை அடைந்திருக்கின்றன என விதந்து கூறுவதால் இந்நூல் <u>திருக்குறட் சொல்லடைவு</u> எனும் பெயர்பெற்றுள்ளது.

இவ்வாறு பகுபதவுறுப்புக்களாய எழுத்தெண்ணியும் முறையாகவே சொல்லெண்ணியும் ஒவ்வொரு சொல்லின் கீழும் அதன் இலக்கணம் எண்ணியும்

பொருளெண்ணியும் மரபு எண்ணியும் தொகுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூல் இவ்வாறு திருக்குறளை ஆழ்ந்தறிவதற்குத் தமிழில் வெளிவருகிற முதற் பேரகராதி ஆகும். (குறிப்பு: ஜி. யு. போப், மா. செட்டியார் நூல்களைவிட இது மூன்றுமடங்கு பெரிது என்பதை அடிக்குறிப்பில் விளக்குகிறார் ஆசிரியர்). இன்னும் வெளிவர வேண்டியதாயுள்ள இலக்கண விளக்க வரன்முறை மரபு அகராதிக்கு(எட்டிமாலஜிக்கல், டெரிவேற்றிவ், இடியமெட்டிக் டிக்ஷனரி) எடுத்துக்காட்டாக விளங்குகிற தமிழ்ச் சிற்றகராதியாகும். சிறந்ததொரு இலக்கியத்தின் வழி இலக்கணங் கற்பதற்கு ஏற்றதொரு கருவி நூலாகும்; சொற்களே எண்ணங்களின் வேராதலின் திருவள்ளுவர் கருத்துக்கள் எல்லாவற்றினுடைய விடாத்தொகுப்பாகும். யாவர் தேவைக்கும் இசைந்த திருக்குறள் மேற்கோள்களை வேண்டியாங்கு உளப்படுத்துவதற்கு உதவவல்ல உறுதணையாகும்; திருவள்ளுவர் காலத்துச் சொல்லாட்சி நிலையை வரையறுத்து விளக்குகின்ற வழக்கு நூலுமாகும். தமிழில் வெறெவரும் விளக்காத சொல்வன்மையைப் பற்றி விரித்துரைத்ததுடன் அமையாது அதறகான அடிப்படைகளையெல்லாம் கையாண்டிருப்பதிலும் திருவள்ளுவர் இணையற்றவராய் விளங்குவதையும், அவரது எழுத்து, சொல், பொருள் வளப்பொலிவையும் இந்நூல் இனிது விளக்குவதைக் காணலாம். தனித்தமிழ்ச் சொற்களின் உறுப்புக்களாய பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை முதலியன பொருள் பயக்கும் வழியை இனிதுணர்ந்து இன்புறுவதற்கு இந்நூல் போல் உதவுவது வேறில்லை எனலாம் (முன்னுரை. பக்கம் 6-7).

இவ்வடைவை அகராதிப்பணிக்கும், சொற்பொருளாய்விற்கும் இலக்கண ஆய்விற்கும் இலக்கிய ஆய்விற்கும் கருவி நூலாக ஆசிரியர் கருதியிருக்கிறார்.

<u>வைப்புமுறை விளக்கம்</u>

1. இந்நூலுள் முதற்கண் திருக்குறட்சொல்லும், இரண்டாவது வேண்டிய அளவு தொடர்ந்த சொல்லும் மூன்றாவது பகுபதமுடிவும், நான்காவது இலக்கணக் குறிப்பும், ஐந்தாவது உரைப்பொருளும், அச்சொல் இருக்கும் குறட்பா எண்களுமாகக் காட்டப்பட்டுள்ளன.
2. உடன் காண எளிதாகுமாறு திருக்குறட் சொற்கள் யாவும் பகுதிபற்றியன்றி அகராதி முறை பற்றியே வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
3. பகுபத முடிவு நன்னூலைப் பின்பற்றியது. இவை எண் குறியீடுகளால் காட்டப்படுகின்றன.
4. பொருளுக்குப் பரிமேலழகருரையே பெரும்பாலும் தழுவப்பட்டுள்ளது.

எ.டு அகழ்வாரை (அகழ் 1, வ் 3 ஆர் 2, ஐ 12), (பலர். எதிவி. அ. 2ம். வே) = தோண்டுவாரை 151

அங்கம் (ஆரி. 2) (வட. சினை) - உறுப்பு. அங்கவியல் அதி. 64-95 வரை.

அச்சம் (அஞ்சு 1 அச்சு 10 அம்2) (பண்.) = நடுக்கம் 146, 501, 534, 1075, அதி {தீவினையச்சம்} அதி 107 {இரவச்சம்}

அடங்காமை [(அடங்கு1, ஆ3, மை2 X அடக்கம்)] (எ.ம.தொ.பெ) - அடங்கியொழுகாதிருத்தல் 121, 80

அதற்கு (அ1, து 2, அன் 4, அற் 10, கு12) (ஒன், ச. பெ. 4ம் வே) -

அதனுக்கு 391, 518, 802, 1124, 1330

ஆற்றின் [(ஆற்று1, இன் 2), (செயின், எதி. வி. எ)] - செய்தால்38, 46, 234 - வல்லனானால் 126, 297, 525 (ஆறு 1 ஆற்று9 இன்4) (பண். 3ம் வேதொ) - நெறியால் 123, 164, 468, 477, 725, 975 (7ஆம் வே. தொ) - நெறியின்கண் 46, 48, 130 (5 ம் வே. தொ) - நெறியினின்றும் 716 (இங்கு பெயரும் வினையும் வேறுபடுத்தப்படவில்லை).

செயற்கு (செய் 1, அல்4 - அற் 10, கு12) (தொ. பெ. 4ம் வே.) - செய்தற்கு 26; - ஆக்குதற்கு 375; - செய்து கொள்ளற்கு 781. (இது வினை எச்சம் ஆகும்) (மே. பா. செயதற்கு - செய்தற்பொருட்டு.)

மேலும் ஐ, அது, உம், ஏ முதலியன பிரிக்கப்பட்டுப் பொருள் கூறும் முறைகளை நோக்குக. இடைச்சொல்லின் இலக்கணப்பொருளை வரையறுக்கும் முயற்சி புதியது. குறிப்பாக ஐ போன்ற வேற்றுமை உருபுகளுக்குப் பொருள் கூறும் முறை நோக்குக. இப்பாகுபாட்டிற்கும் பிற இலக்கண விளக்கங்களுக்கும் நன்னூலைப் பின்பற்றுகிறார் (மெற்றாலேங்குவேஜ் - கருவிமொழி ஆசிரியர்.

பெயர், வினைகள் மயங்கி நிற்பது இதில் ஒரு குறையாகக் கூறலாம். எனினும் சொற்களைப் பகுதிபற்றியமைப்பதைவிட வடிவம் பற்றி அகரவரிசையாகத் தொகுத்ததால் இக்குறை ஏற்பட்டிருக்கலாம். எனவே இதைப்பகுதிபற்றித் தொகுத்துப் பகுதிகளின் கீழ் விகற்ப வடிவங்களை அமைப்பதுடன் அவை அகரவரிசையில் வருமிடங்களிலும் சுட்டுக்குறிப்புடன் அமைத்துவிட்டால் இன்னும் சிறப்பாக அமையும். வருமிட எண்ணைச் சுட்டுவதுடன் வரும் தொடர்ச்சூழலை எடுத்துக்காட்டாய் அமைப்பதும் விரும்பத்தக்கது. இவர் இலக்கண விளக்கத்திற்குப் பின்பற்றிய கருவி மொழிபற்றிக் கருத்துவேறுபாடு காணப்படலாம். ஆனால் ஏதாவது ஒரு சரியான கருவிமொழியை எப்படியும் பயன்படுத்தித்தானே ஆகவேண்டும். அதை எல்லோரும் ஏற்பதைவிட எவ்வளவு தூரம் பயனுடையது எனபதையே நோக்க வேண்டும். எவ்வாறு நோக்கினும் குறளுக்கும் பிற இலக்கியத்திற்கும் தோன்றிய சொல்லடைவுகளுள் இது அமைப்பாலும் பயனாலும் மிகவும் சிறந்தது என்பதில் ஐயமில்லை.

<u>இன்டெக்ஸ் ஆப் புறநானூறு(1962)</u>

1954 இல் கேரளப்பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் வ. ஐ. சுப்பிரமணியம் அவர்கள் தீட்டிய சங்க இலக்கியச் சொல்லடைவும் இலக்கணமும் என்ற திட்டத்தின் கீழ் அவரே தயாரித்தது. இதுவே கேரளப் பல்கலைக் கழகத்தும் பிறவிடத்தும் தயாரிக்கப்பட்ட பல சொல்லடைவுகளுக்கு முன் மாதிரி.

இச்சொல்லடைவு இலக்கணம் எழுதுவதற்குத் துணையாகத் தயாரிக்கப்பட்டதாக ஆசிரியர் முன்னுரையில் குறிப்பிடுகிறார். மேலும் அவரே மூலபாட ஆய்வு, நடையியல், பண்பாட்டு ஆய்வு, வரலாற்று ஒப்புமை மொழியியலாய்வு முதலியவற்றிற்கும் இது பயன்படும் என்றும் குறிப்பிடுவார். இத்தகைய சொல்லடைவு சிறப்பாக அகராதி தொகுக்கப்பயன்படுவது விதந்து சுட்டப்படாதது வியப்பாகவே உள்ளது.

ஆசிரியர் இத்தகைய சொல்லடைவை வைத்து இலக்கணம் எழுதுவதையே நோக்கமாகக் கொண்டதால் அதற்குத் தக உருபன்கள், சொற்கள் முதலியவற்றைத் தனித்தனியாகப் பிரித்துக் கொடுத்துள்ளார். (ஒப்பிடுக: தெ.பொ.மீ கருத்து. சங்க இலக்கியச் சொற்களஞ்சியம். முன்னுரை)

<u>சொல்லடைவின் அமைப்பு:</u>

உருபன்கள், விகுதிகள், சொற்கள் (இடைச் சொற்கள் உட்பட) முதலியவை தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுத் தலைச் சொல்லாக அமைக்கப்பட்டுள்ளன. முதலில் ஒலியனியல் பெயர்ப்பிலும் அதன் கீழ்த்தமிழ் எழுத்துக்களிலும் சொற்கள் அகரவரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பொருளும், இலக்கண நிலையும் ஆங்கிலம், தமிழ் என்று இருமொழிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன. அதையடுத்துச் சொல்வருமிடம் பாடல் ஏறு வரிசையிலும் தொடர்ந்து பாடிய புலவர் பெயர் சுருக்கெழுத்திலும் அமைந்துள்ளன.

எ.டு. 1. அகற்ற - நீக்க வி.எ. (to get rid off) V. P. 26.3. மா.கி.

376-8 பு.ந 377-4, உ 390-20 ஔ

ஆனால் இதன் பொருளைப் புறத்தில் நோக்கியபோது வேறுபொருளும் புலப்பட்டது.

- அகற்ற - இடமகலச்செய்ய - 26-3
- நீக்க, ஒட்ட(to drive away) கனையிருளகற்ற 376 - 8
- நீக்க (to banish) இனையலகற்ற 377 - 4
- நீக்க (banish) பெரும்புலம்பகற்ற 390 - 20

சொல்லடைவில் நீக்க என்ற ஒரு பொருள் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

2. அகன்ற - பரந்த (which widened R.P.) பெ. எ. 3 - 16 இ.த. 257 - 2 O
3. அகில் - அகில்கட்டை(eagle wood C.B.) வே. அ. 337 - 10 கபி. (அகிலார் நறும்புகை)

உம், ஐ போன்ற (உருபன்கள்) இடைச்சொற்கள் தனித்தனிப் பதிவாக அமைகின்றன. திருக்குறட் சொல்லடைவில் வேற்றுமை உருபுகள் தாம் தொடர்ந்த பெயருடனும் பின்னர் தனியாகவும் காட்டப்படுவது போல் காட்டப்படாமல் அவை தனியாக மட்டுமே காட்டப்பட்டுள்ளன.

சொற்களின் சந்திமாற்று வடிவங்கள் காட்டப்படவில்லை - ஏனெனில் சந்தி விதிகளால் அவற்றை அறிந்து கொள்ளலாம் என்பதால்.

அன்மொழித்தொகை போன்றவை பிரிக்கப்படவில்லை என்று கூறப்பட்டாலும் பல தொகைகள் பிரித்தே காட்டப்பட்டுள்ளன. அகப்படு போன்ற கூட்டு வினையடிகள் கூடத் தனியாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இத்தகைய சொற்கள் அமையும் தொகைகள் பற்றி அறிந்துகொள்ள அவற்றின் தொகை வடிவங்களையும் காட்டியிருக்கவேண்டும்.

இலக்கண வரையறை

மரபிலக்கணப் பாகுபாடு போதுமானதன்று என்பதால் மரபிலக்கணச் சொற்களுடன் வேற்றுமை அடி, வேற்றுமைத் தொகை, எழுவாய், பயனிலை, ஒட்டுஅடி, ஒட்டுத்தொகை முதலிய தொடரியல் பாகுபாடுகளை அமைத்துக் கொண்டுள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பொருள்

பொருள் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளது. தமிழ்ப் பேரகராதி தரும் ஆங்கிலப் பொருள்கள் அமைக்கப்பட்டுள்ளன என்கிறார் ஆசிரியர். தலைப்புச் சொற்களிலுள்ள ஒவ்வொரு உருபனுக்கும் பொருள் தருவதாக ஆசிரியர் கூறுவார் (எ.டு. பெயரெச்சம் -

வந்த - which, who came R.F.) இதில் தமிழுக்கு இணையான ஆங்கில வடிவம் இல்லாதபோது மிக ஒற்றுமையுடைய பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்ப்பொருள் உரையாசிரியரை ஒட்டியே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளது.

மதிப்பீடு

இவ்வடைவில் பல இடங்களில் சொற்களைப் பிரித்துள்ள முறை பொருள் நிலையிலும், இலக்கண நிலையிலும் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. முன்னே கூறியபடி உருபன்கள் வரை தனித்துப் பிரிப்பது என்று கொண்டதால் தொகை வடிவங்களும் கூட்டு வடிவங்களும் பிரிக்கப்பட்டுள்ளன.

அகப்படேன், செ. குன்றா. வி. - கைக்கொள்ளுதல், 72-9 என்ற பொருளுள்ளது. அது, அகம் - inside C. B உள் வே. அ. - என்றும்

படேன் will not happen-I.H.B. படுவதிலேன் ஒ. அ. 72-9 பாதெ.நெ. என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் முழு வடிவமும் அறிய வாய்ப்பில்லை. அது போன்றே - அதனால் - ஆகையால் so, therefore என்பது அது - that is 18-6 அன் - clitic, ஆல் - clitic எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இது சுட்டு முதலாகிய காரணக் கிளவி. இது சுட்டுப்பெயர் + வே. உ. அமைப்பிலுள்ள கிளவியிலிருந்து வேறுபட்டது. இது தனிச்சொல் என்று தொல்காப்பியரும் சுட்டியுள்ளார். (சொல் 40).

சங்க இலக்கியச் சொற்களஞ்சியம், பழந்தமிழ் நூல் சொல்லடைவு இரண்டும் இதைக் கூட்டுவடிவிலேயே அமைத்துள்ளன. மே. பா. நாண்மீன் - star 160-8 என்று வரவேண்டியது (திங்களும் நாளும் தொல். எழு. 286) நாள் - day வே. தொ., மீன் - star, விண்மீன் வே. அ. என்றும் பிரிக்கப்பட்டுவிட்டது. இது இரு பெயரொட்டுத்தொகை. கோள்மீன் நோக்குக.

மைம்மீன்(75-10) என்பதைப் பிரித்து மை- சனி எனப் பொருள் கொடுத்தது தவறு. மேலும் மை என்றால் மேடராசி (Aries of the Zodiac) என்ற பொருளுண்டு. அப்பொருளை இதற்குக் கொடுத்ததும் தவறு.

சங்க இலக்கியத்தில் தொகைச் சொற்களை வேறுபடுத்துவது கடினமானது (எ.டு. வானோர் அரும் பெறலுக்கு - புறம் 215 ஒட்டன்றி ஒரு பெயராய் நின்றது என்பார் உரையாசிரியர்)- இவ்வாறு வருமிடங்களில் தொகை, தொடர் வடிவங்களை ஒரு பதிவாகக் கொடுத்து அவற்றின் பின் மொழிகளையும் தனித்தனிப் பதிவுகளாக அமைத்துச் சுட்டுக்குறிப்பு அமைத்துவிட்டால் போதுமானது.

எ.டு. படேன் : பார்க்க அகப்படேன், மீன் - பார், நாண்மீன், அது - பார்,

அதனால் அன்-பார், அதனால் ஆல்-பார், அதனால் . . இதில் சில இடங்களில் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. எ.டு. அந்துவஞ்சாத்தன் 71.3; சாத்தன் 71.3 - ஆனால் சாத்தன் அந்துவஞ் சாத்தன் - என்ற தொகையில் வரும் என்பது பற்றிய குறிப்பில்லை.

இலக்கண வரையறை

இலக்கண வரையறையில் எழுவாய், பயனிலை, வேற்றுமையடி, வேற்றுமைத்தொகை முதலிய தொடரியல் வரையறைகள் கூறப்படுகின்றன. சொல் நிலையில் அவற்றைப் பெயர்கள், பண்படிகள் என்றும் சுட்டுவதால் தவறில்லை. ஒட்டு அடி, ஒட்டுத்தொகை முதலியன குறிப்பு வினைமுற்றுக்கள் என்று தோன்றுகின்றன. இவை எல்லாவற்றுடன் எடுத்துக்காட்டுத் தொடர்களையும் அமைத்திருக்கலாம்.

1. வேற்றுமை அடி என்பதில் எத்தனையாவது வேற்றுமை என்று விளக்கலாம்.

எடு. அஃது - வே. அ. செயப்படுபொருள் 97:25, அஃது அறிந்து

2. வேற்றுமைத்தொகையின் பின்மொழி என்றே சுட்டலாம். அகம் வே. தொ. கானகம். 5:3 நீரகம் 99 - 3 : அகழ்-அகழி-வே.தொ., குண்டகழ் 379 : 18. இதற்கு எடுத்துக்காட்டுகள் தெளிவுதரும்.

3. பெயர் எச்ச அடி - பெயர் எச்சம் என்பவற்றில் பெயரெச்சப் பொருளை விளக்கும் முறையில் விரிவாக்கலாம். எ.டு. அட்ட பெ. எ. 23-16 அட்டமுன்ப - எழுவாய், 213 - 1 அட்ட வேந்து, எழுவாய், 302-9 வேலினட்ட களி - செயப்படுபொருள். மேலும் உண்ட, தாங்கிய, பாடிய, பார்க்கும்(மரபு) முதலிய பெயர் எச்சங்களை நோக்குக. எதிர்மறை வடிவங்களை விதந்து சுட்டலாம்.

4. வினை எச்சங்களுள்ளும் வாய்பாடு அல்லது பொருள் அடிப்படையில் வேறுபடுத்தலாம்.

5. வினையடிகளுக்கு அவற்றின் வினைத்திரிபுகளைத் தருவது வேண்டும். அதுபோன்றே அவை செ. குன்றிய வினைகளா அல்லவா என்ற குறிப்பும் வேண்டும். அகப்படு 72.9 என்பது 6 ஆம் வினைத்திரிபா? 11 ஆம் வினைத்திரிபா? இதன் வினைத்திரிபை மற்ற வினை விகற்பங்களை ஒப்பிட்டே நிச்சயிக்க இயலும். இது பிறவினைமேல் நின்றது என்பார் பழைய உரைகாரர். அதாவது இது செயப்படுபொருள் குன்றாவினை.

6. வேற்றுமை உருபுகள் தொடர்ந்து வரும் தொடர்களை அவ்வாறே அமைப்பது போப், சாமி வேலாயுதனார் நூல்களில் காணப்படுகிறது. இது உகந்ததே. இத்துடன் அடைச்சொற்கள் தொடர்ந்து வரும்(எ.டு. அவனும்) தொடர்களையும் அவ்வாறே கொடுக்கலாம்.

7. வேற்றுமை உருபுகள், இடைச் சொற்களுக்கு இதில் பொருள் கூறப்படவில்லை. வேலாயுதனாரைப் போல் பொருள் வரையறுத்திருக்கவேண்டும். இல்லை எனில் அவை வரும் தொடர்களையாவது கொடுத்தமைத் திருக்கலாம்.

<u>பொருள் வரையறை</u>

இவ்வடைவிலுள்ள ஆங்கிலப்பொருள் தமிழ்ப் பொருளின் நேரடி மொழிப்பெயர்ப்பன்று என்று ஆசிரியர் கூறுவார். இது விளங்குமாறில்லை. ஆங்கிலப்பொருளுக்குத் தமிழ்ப் பேரகராதியே அடிப்படை என்று கொண்டது சரியன்று. ஏனெனில் அதில் சொற்களின் வருமிடம் ஆய்ந்து பொருளமைக்கப் பெறவில்லை. பொதுப்பொருளே உள்ளது. எனவே இவ்வடைவிலும் பெரும்பாலும் சொல்லின் பொதுப்பொருளே ஏறிவிட்டது. தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறப்படும் பொருள் தெளிவின்மைக்குக் காரணம் சொல்வருமிடம் நோக்கிப் பொருள் வரையறுக்காமையே. வினைச் சொற்களின் விகற்ப வடிவங்கள், பெயர்ச் சொல்லின் கட்டுண்ட வடிவங்கள் முதலியவை அகரவரிசையில் வேறு வேறிடத்தில் அமைவதால் சொல்லின் பொருளை வடிவங்கள் வருமிடம் ஆகியவற்றைத் தொகுத்துப் பொருள் வரையறுப்பது இயலாமற் போயிருக்கலாம். சொல் வருமிடத்தை ஒட்டிப் பொருள் நிச்சயம் செய்வதிலும் சொற்களைத் தொகுத்து வைத்துப் பொருள் வரையறை செய்வதிலும் கவனம் செலுத்தாமற் போனதற்கு - அன்றைய அமைப்பியல் மொழியியலில் பொருளைப் புறக்கணித்தமையும், இவ்வடைவுகள் அகராதிப் பணிக்கு எவ்வகையில் உதவும் என்பது பற்றிய முன்னோக்கு இன்மையும், இவற்றை இலக்கணத்துணை என்ற அளவில் நோக்கியமையும் காரணமாக இருக்கலாம்.

எ.டு. அகப்படேன் tr. 'கைக்கொண்டேன்' உவந்து intr. மகிழ்ந்து having been pleased 130-4, 360-4 என்று கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது இடத்தில் உவந்து tr. விரும்பி to like 360-6 எ.டு. தாழுவந்து என்ற பொருளில் வருகிறது. இது போன்ற பல எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம் (மே. பா. கூடும்).

இவ்வாறு சொற்களின் விகற்ப வடிவங்களுக்குப் பல இடங்களில் பொருள் கொடுத்திருப்பதால் இத்தகைய சொல்லடைவை அகராதி தயாரிக்கப் பயன்படுத்த வேண்டுமென்றால் மீண்டும் பொருளைப் பார்த்துத் தொகுத்து வரையறை செய்ய வேண்டியுள்ளது. இதுபோன்றே இது மொழி பெயர்ப்புக்கும் உதவுமாறில்லை. அதாவது அகராதி தயாரிப்புக்குச் சொற்கள் இருக்குமிடம் அறிய மட்டுமே இவ்வடைவு மிகவும் பயன்படும் நிலையில் உள்ளது. அகராதி முறையில் பெயர், வினை அடிகளின் கீழ் விகற்ப வடிவங்களைத் தொகுத்துப் பொருள் வரையறை செய்திருந்தால் இதன் பயன் மிகுந்திருக்கும்.

இடைச்சொற்களுக்கு இலக்கணப் பொருள்கூட வரையறை செய்யப்படாமல் உள்ளது(பார்க்க, ஐ - உம்). இதில் செப்பம் தேவை.

பெயரெச்ச வினையெச்சப் பொருள்களையும் இடம் நோக்கி வரையறுத்திருக்க வேண்டும். உரையாசிரியர் சிலசமயம் பொருள் கூறும்போது ஒரு பொருட் பன்மொழிகளை அமைப்பது போலன்றி விளக்க முறையில் பொருள் கூறுவது விரும்பத்தக்கது

<u>*சங்க இலக்கியச் சொற் களஞ்சியம்(1965)*</u>

திரு. தண்டபாணி தேசிகர், திரு மு. சுப்பிரமணியம் முதலியவர்கள் உதவியுடன் வெளியிட்டுள்ள இச்சொல்லடைவில் சொற்கள், சொல்லுறுப்புக்கள் எல்லாம் அகர வரிசையில் அமைந்துள்ளன. அடிச்சொல்லின் மாற்றுவடிவங்கள், சந்தி விகார வடிவங்களும் இதில் உள்ளன. இது சிறந்த அகராதியின் முடிவான வடிவமென்று தாங்கள் எண்ணவில்லை என்பார் தெ.பொ.மீ பல இடங்களில் இலக்கணக்குறிப்புளது பொருள் எல்லாவற்றிற்கும் கூறப்படவில்லை தொடர்களும், இணைச்சொற்களும் உள்ளன. எல்லாச் சொற்களும் வருமிடங்கள் முழுமையும் விடாது இதில் குறிக்கப்படவில்லை.

<u>*பழந்தமிழ்நூற் சொல்லடைவு (1967)*</u>

சொற்களும், தொடர்களும் வருமிடத்துடன் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கணக்குறிப்பும் பொருளும் இல்லை. இதனால் பல பொருள் தரும் சொற்கள் ஒன்றாக அமைந்துள்ளன.

எ.டு. நகரம் - நகர எழுத்து, பட்டினம். இது முழுமையானதன்று. சொல் வருமிடம் நோக்க உதவும்.

<u>*1. சிலப்பதிகாரம் சொல்லடைவு (1965), 2. அகநானூற்றுச் சொல்லடைவு (1972)*</u>

<u>*3. குறுந்தொகைச் சொல்லடைவு (1974) 4. ஐங்குறுநூற்றுச் சொல்லடைவு (1975)*</u>

மேலே கண்ட நான்கும் கேரளக் கருத்துப் பள்ளியைச் சார்ந்தவை - பெரும்பாலும் புறநானூற்றுச் சொல்லடைவைப் பின்பற்றுபவை. ஆங்கிலத்தில் பொருள் கூறுபவை. இவை இலக்கணக் குறிப்புக்களில் பெயர், கு.வி. முதலியவற்றை ஏற்றுப் புறநானூற்றுச் சொல்லடைவில் கொடுத்திருந்த தொடரியல் இலக்கணக் குறியீடுகளை நீக்கிவிட்டன. எனினும் அதன் குறைகளும் நிறைகளும் இவற்றிற்கும் பொருந்தும்.

சிலப்பதிகாரச் சொல்லடைவு வெள்ளியம்பலம் என்ற பெயரைக் கூட இரண்டாகப் பிரிக்கும். யாழிசை மேல் <u>வைத்து</u> என்பதில் <u>வைத்து</u> என்பதற்கு இட்டு என்று பொருள்

கூறும். அது சொல்லுருபு என்ற நிலை நினைக்கப்படவில்லை.

அகநானூற்றுச் சொல்லடைவிலும் இலக்கணக் குறிப்பு, பொருள் வரையறை முதலியவற்றில் தெளிவின்மைகள் உள. எடுத்துக்காட்டாக - அழிந்தது - ஆகுவது - செய்வது என்ற அமைப்பில் வரும் வினை வடிவங்களை வினையாலணையும் பெயர் எனக் கொண்டு அவ்வாறே பொருள் கொடுக்கும். ஆனால் உண்மையில் அவை பல இடங்களில் தொழிற்பெயராய் அமையும். சில இடங்களில் அவை செயப்படுபொருள் முதலியவற்றை உணர்த்தி வரும் (குறளில் உறங்குவது, விழிப்பது - தொழிலையும், உண்பது, உடுப்பது - செயப்படுபொருளையும், வெல்வது - இடத்தையும் குறிப்பதை நினைவூட்டலாம், இத்தகைய வி.அ. பெயர்கள் தொழிற்பெயராய் அமைவதை நச்சினார் (தொல்.சொல்.71) சாமிநாத தேசிகரும் (இலக்கணக்கொத்து.83) ஆர்டனும் குறிப்பர்

குறுந்தொகை அடைவு இத்தகைய சொற்களைச் சிலவிடத்துத் தொழிற்பெயர் என்றும் சிலவிடத்து வினையாலணையும் பெயர் என்றும் குறிக்கும்.

வெறும் புறவடிவை மட்டும் கொண்டும் பொருள் வருமிடம் நோக்காது செய்த இம்முயற்சிகளை அகராதியியல் அறிஞர்கள் கவனத்துடன் கையாள வேண்டும்.

ஐங்குறுநூற்றுச் சொல்லடைவில் பொருள் வரையறை, கூட்டு வடிவங்களைக் கையாளல் முதலியவற்றில் செப்பம் அடைந்துள்ளது. (எ.டு. படர்தரும் - ஒடு, இன் - உம் முதலியவற்றின் பொருள் நோக்குக.)

இவை போன்று இன்னும் பல அடைவுகள் உள்ளன. குறிப்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட அடைவுகளைக் காணும் வாய்ப்பு ஏற்படவில்லை தமிழ் போன்றே பிற இந்திய மொழிகளிலும் முயற்சிகள் நடந்துள்ளன. அவற்றை எல்லாம் ஆராய்ந்து மதிப்பிட வேண்டும்.

<u>சொல்லடைவுகளை ஆக்கும் முறை - புதிய கருத்துரைகள்</u>

இதுவரை கூறியவற்றிலிருந்து இப்போதுள்ள சொல்லடைவுகளிலுள்ள குறைகள் புலனாகியுள்ளன. எனவே அவற்றைச் செப்பம் செய்யவும் மேலும் அதன் பயனை மிகுவிக்கவும் என்னவெல்லாம் செய்யலாம் என்பது பற்றியும் மேலே கூறியவற்றிலிருந்து சில கருத்துக்கள் உருவாகியிருக்கின்றன. அவற்றை ஒருவாறு வகைப்படுத்திக் கூறிச் சில எடுத்துக்காட்டுகளையும் அமைக்கலாம்.

முன்னோர் முயற்சிகளைத் திறனாய்வு செய்ததால் அவை எல்லாம் பழுது என்று நினைத்தல் கூடாது. அது போன்றே நாம் கூறுவதும் குற்றமற்றது என்று கொள்ளல் கூடாது. இது செம்மையை நோக்கிச் செல்லும் நெடும்பயணம். நாம் கூறுவனவற்றிலும் செப்பமும், தெளிவும் பெற வேண்டிய பகுதிகள் உள்ளன. அவற்றை ஆய்வாளர் நுணுகி நோக்கி மேலும் செப்பம் பெற உதவ வேண்டும்.

<u>அடிப்படை நோக்கம்</u>

சொல்லடைவுகளை நாம் இலக்கணம் எழுதுவதற்கு, அகராதி தயாரித்தலுக்கு என்று மட்டும் வரையறுத்துக் கொள்ளாமல் கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்ட மூலபாட ஆய்வு, பண்பாட்டாய்வு, மொழி வரலாற்றாய்வு என்ற பரந்து பட்ட நோக்கங்களுக்காக ஆக்குவதாக அமைத்துக் கொள்வது நல்லது - ஏனெனில் இத்தகைய கருவி நூல்களை மீண்டும் மீண்டும் அமைப்பது இயலுவதன்று. எனவே நம் சொல்லடைவுகளை *1. அகராதி வடிவிலும் 2. சொற்கள் அடைவு முறையிலும், 3. சொல்லிருப்பிசைவு வடிவிலும் - அமைத்து கொள்வது சாலச் சிறந்ததாகும்.* இத்தகைய ஒரு கலப்பு அமைப்பையே நாம் இங்கு பரிந்துரைக்கின்றோம். இது நம் பன்முகத் தேவைகளை நிறைவேற்ற இயலும் என்று தோன்றுகிறது. எனவே சொல்லடைவுத்

தொகுப்பு இத்தகைய முழு நோக்கை எல்லா நிலைகளிலும் மேற்கொள்வது சிறந்தது.

இதில் உரையுள்ள பழைய இலக்கியங்களுக்கும், தற்கால உரைநடைஇலக்கியத்திற்கும் இத்தகைய சொல்லடைவுகளைத் தொகுக்கும்போது தனித்தனியாகச் சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவற்றைத் தக்கவிதத்தில் தீர்த்தல் வேண்டும். கேரளப் பல்கலைக்கழகத்தில் இவ்விதத்தில் இரண்டுக்கு மேற்பட்ட முயற்சிகள் நடந்தன. அதனடிபபடையில் சிலவற்றைப் பேசலாம்.

சொற்களைப் பிரிக்கும் முறை

1. உருபு இடைச்சொல் தொடராமலும், வேறு சொல்லுடன் தொகாமலும் தனித்து வரும் சொற்களை அவ்வாறே பிரிக்கலாம். எ.டு. அகரம், முதல

2. தொகைச்சொற்கள், கூட்டுச் சொற்கள் முதலியவற்றை ஒன்றாக எடுத்துப் பின் அவற்றிலுள்ள பின்மொழிகள் முதலியவற்றைப் பிரித்துத் தனித் தனியாகவும் அவை எவற்றுடன் வருகின்றன என்ற கூட்டுக் குறிப்புடனும் அமைக்க வேண்டும். எ.டு. கொல்யானை, யானை, பார்: கொல்-; உய்த்துவிடும். விடும்-பார்: உய்த்துவிடும், ஆதிபகவன். பகவன் - பார் - ஆதிபகவன்.

3. பெயர்ச்சொற்களில் அவற்றுடன் தொடரும் வே. உருபுகள், இடைச் சொற்கள் முதலியவற்றுடன் ஒருமுறையும் பின் வேற்றுமை உருபுகள் முதலியவற்றைத் தனியாகப் பிரித்து அவை வரும் சூழல் எடுத்துக்காட்டுடனும் அமைக்க வேண்டும்.

எ.டு. அவனை, ஐ - பார்: ஐ...க் கண்டேன், அவனும் அவளும், உம் - பார் : அவனும் அவளும்.

4. வினைகளில் கூட்டு வினைகள் போன்றவற்றையும் மேற்கண்ட முறையில் பிரிக்கலாம். எ.டு. அகப்படு - படு. பார் : அகப்படு. வழங்கிவருதலால் - வருதலால் - பார்: வழங்கி.... ஆல் பார்: வழங்கி வருதலால்.

5. பெ.எ., வி.எ. முதலியவற்றில் அவை கொண்டு முடியும் சொற்களை வருமிட எடுத்துக் காட்டாய் அமைக்கலாம்.

எ.டு. உண்ட பெ.எ. - முருகன் - தட்டு - வீடு; ஒவாதே வி.எ. - செயல் ; பிறவிப் பெருங்கடல் முதலிய நீண்ட தொடர்களையும் ஒன்றாக அமைத்துப் பிரித்துக் கொடுக்கலாம்.

இலக்கணக்குறிப்பு

1. சொல்லிலக்கணக்குறிப்புடன் தொடரியல் இலக்கணக் குறிப்பும் கொடுக்கலாம். (வேலாயுதனார் போல பகுபத உறுப்புக்கள் பற்றிய குறிப்பும் தரலாம்.) எ.டு. அகரம் - பெ.சொ - <u>எழுவாய்</u> பெருங்கடல் - பெ. 2 - ஆம் வேற்றுமை (......நீந்துவார்)' உண் 7 செ. <u>குன்றா வி.</u>

2. வேலாயுதனாரைப் போலத் தொடர்கள், தொகைகள் வரும்போது அதன் இலக்கணக் குறிப்பு முழுமையும் தரலாம். எ.டு: உகைத்துள்(பெயர்+அத்து+ஏழாம் வே. இடஉருபு) ; கைகூடும் (பெ - எதி. வி. முற்று)

3. பெயர் எச்சம் முதலியவற்றில் அதன் உட்பாகுபாடுகளையும் அமைத்தல் வேண்டும் எ.டு. உண்ட. பெ. . . . . சாத்தன். எழு; . . . . சோறு செயப் தட்டு . . . கருவி; - வீடு - இடம்.

4. வினைகளுக்கு வினைத்திரிபு காட்டல் வேண்டும். எ.டு. உண் - செ. குன்றா. வி. பெயர்களுக்கும் வேற்றுமைத் திரிபை வகைப்படுத்திக் காட்டலாம். எ.டு. மரம் (- அத்துப்பெறும்) வீடு (- இன் பெறும்).

சொற்களை வரிசைப்படுத்துவது

1. சொற்களைப் பகுதிபற்றி — அடிச் சொல்லடிப்படையில் அகர வரிசைப்படுத்துவதே சிறந்தது.

2. எனினும் விகற்ப வடிவங்களையும் அகர வரிசையில் அமைத்து அவை பற்றிய * விளக்கங்களைப் பகுதிகளின் கீழ்க் கீழ்க்காணுமாறு சுட்டலாம். அச்சம் : பார் : அஞ்சு, அஞ்சு . . . . அச்சம், தொ.பெ.

3 தமிழ்ப் பேரகராதி போன்றவற்றில் உள்ளது போன்று பகுதிபற்றிச் சொற்களை அகரவரிசையில் அமைத்து அதன்கீழ் அதன் திரிபுகளை (வினைத்திரிபு, பெயர்த்திரிபு) ஏதாவது முறையில் அமைக்கலாம்.

வினை

வினையடிகளின் கீழ் எல்லா வினை விகற்பங்களையும் தொகுத்துப் பொருள் வரையறுத்து முதலில் முற்று வடிவம், எச்ச வடிவம், வினையடி வடிவம் என்று ஏதாவது திட்டமான முறையில் அமைக்கலாம். சில வினைகளுக்கு வினையடிகள் காணப்படலாம். சிலவற்றிற்கு வினை விகற்பங்கள் மட்டும் வரலாம். அதை மீட்டுருக்செய்து கொடுக்கலாம்(உடுக்குறியிட்டு). * எ.டு. மல்கு 5 செ. குன்றிய வி. , மல்க வி.எ.

பெயர்கள்: பொருள் வரையறுத்தபின் அவற்றின் தொடர்களை வரிசைப்படுத்தவேண்டும் (பொருள் வரையறுத்தல் பார்க்க).

4. வேற்றுமை உருபுகள், இடைச்சொல் தொடர்ந்து வரும் பெயர் வினைகளைக் கொண்டு முடியும் தொடர்கள் ஆகியவற்றுடன் அமைத்தல் வேண்டும்.

பொருள் வரையறுத்தல்

வினைகளைப் பொறுத்தவரையில் முற்றுக்களில் தான் அதன் பொருள் தெளிவாகும். எச்சங்கள் இலக்கண நிலையிலும் பொருள் நிலையிலும் வேறுபாடடைய வாய்ப்புண்டு (எ.டு. கொண்டு, வைத்து - சொல்லுருபு; நிரம்ப வி. அ., பெ. அ. நொறுங்க — வி. அ. சில வழக்குகளில்)

பெயர்ச் சொற்களில் உள்ளுறைப் பொருள் ஆகுபெயர்ப் பொருள் முதலியன தோன்றும் வாய்ப்புண்டு. இடைச்சொற்கள் வேற்றுமை உருபுகள் முதலியவற்றிற்குப் பல சமயம் இலக்கணப் பொருள்தான் கொடுக்க இயலும். அவற்றிற்கு இயன்ற வரை அகராதிப்பொருள் வரையறுக்க முயலலாம்.

இத்தகைய பொருள்களை எல்லாம் அவை வருமிடம் அறிந்து பொருள் எழுதிய பின் தொகுத்து வகைப்படுத்த வேண்டும். இத்தகைய பொருள்கள் எல்லாம் மொழியின் பொது அகராதியில் சேர்க்க இயலாமற் போகலாம் (எ.டு: குறளில் ஆகுபெயர்ப்பொருள்கள்; இல் — ஆகுபெயரால் இல்லறத்தை உணர்த்தும்— இது பொதுப் பொருளாதற்கேற்றது;

நல்குரவு — ஆகுபெயரால் அதை (1047) உடையானை உணர்த்தும்போது அப்பொருளை மொழிக்குரிய அகராதியில் கொடுக்கவேண்டியதில்லை. அது போன்றே முறி, தளிரின் நிறத்தை உணர்த்தும் ஆகுபெயராகும் போதும்.)

103	பாஞ்சாலி சபதம் ஐந்திலக்கண ஆய்வு (25281 முதல் 271 வரையுள்ள பாடலடிகள்)	விமலா	எம்.ஏ	1992
104	பாஞ்சாலி சபதம் ஐந்திலக்கண ஆய்வு (3578 வரையுள்ள பாடலடிகள்)	தங்கராஜு	எம்.ஏ	1992
105	பாஞ்சாலி சபதம் ஐந்திலக்கண ஆய்வு (177228 வரையுள்ள பாடலடிகள்)	புரியா	எம்.ஏ	1992

106	பாஞ்சாலி சபதம் ஐந்திலக்கண ஆய்வு (113144வரையுள்ள பாடலடிகள்)	தேவகுவு	எம்.ஏ	1992
107	பாண்டிக்கோவை ஐந்திலக்கண ஆய்வு	பாஸ்கரன்	எம்.ஏ	1987-89
108.	பாண்டிக்கோவை ஐந்திலக்கண ஆய்வு	லதா	எம்.ஏ	1989
109.	பாண்டிக்கோவை ஐந்திலக்கண ஆய்வு	பேபிஷகீலா	எம்.ஏ	1989
110.	பாரதிதாசனின் பாண்டியன் பரிசு விளக்கவியல் மொழி ஆய்வும் சொல்லடைவும்	சந்திரா	பி.எச்.டி	
111.	பாரதியாரின் தேசியப்பாடல்களின் மொழிநடையும் சொல்லடைவும்	ஜெயகலா	பி.எச்.டி	1999

112.	பாரதியாரின் வசனகவிதை ஐந்திலக்கணம்	அனிதாகுமாரி	S.R.F.	2000
113	ந.பிச்சமூர்த்தி கவிதைகள் ஐந்திலக்கண ஆய்வு (114135 பக்கங்கள்)	ராணி	எம்.ஏ	1994-96
114	ந.பிச்சமூர்த்தி கவிதைகள் ஐந்திலக்கண ஆய்வு (3050 பக்கங்கள்)	விஜயன்	எம்.ஏ	1994-96
115.	ந.பிச்சமூர்த்தி கவிதைகள் ஐந்திலக்கண ஆய்வு (929 வரையுள்ள கவிதைகள்)	மோகன்ராஜ்	எம்.ஏ	1994-96
116.	ந.பிச்சமூர்த்தி கவிதைகள் ஐந்திலக்கண ஆய்வு (93113 பக்கங்கள்)	மாரியம்மாள்	எம்.ஏ	1994-96

117.	ந.பிச்சமூர்த்தி கவிதைகள் (136154 பக்கங்கள்)	முருகேசன்	எம்.ஏ	1994-96
118.	ந.பிச்சமூர்த்தி கவிதைகள் ஐந்திலக்கண ஆய்வு (5171 வரையுள்ள பக்கங்கள்)	ஜீவலதா	எம்.ஏ	1994-96
119.	ந.பிச்சமூர்த்தி கவிதைகள் ஐந்திலக்கண ஆய்வு (7292 வரையுள்ள பக்கங்கள்)	கலைச்செல்வி	எம்.ஏ	1996
120.	பிரயோக விவேகம் விளக்கவியல் இலக்கணம்	முத்துகிருஷ்ணன்	எம்.ஏ	1971
121.	புதுமைபித்தன் கவிதைகள் விளக்கவியல் இலக்கணம்	நேசமணி	எம்.ஏ	1971
122.	புறநானூறு சொல்லடைவு(மட்டும்)	வ.அய்.சுப்பிரமணியன்		1964

123.	பெரியபுராணம் இலக்கண ஆய்வும் சொல்லடைவும்	வீராசாமி	பி.எச்.டி	
124.	பெருங்கதைவிளக்கவியல் இலக்கணம்	இளவரசு	பி.எச்.டி	1974
125.	மலரும் மாலையும் ஐந்திலக்கண ஆய்வு (284378 வரையுள்ள பாடல் பகுதி)	ராஜாசுந்தர்சிங்	எம்.ஏ	1993
126.	மணிமேகலை இலக்கண ஆய்வு	தாணுமாலய பெருமாள்	பி.எச்.டி	
127.	மலரும் மாலையும் ஐந்திலக்கண ஆய்வு (138202 வரையுள்ள (சித்திரக்கவிதை) பாடல்பகுதி)	சிவா	எம்.ஏ	1993

128.	மலரும் மாலையும் ஐந்திலக்கண ஆய்வு (203283 வரையுள்ள பாடல பகுதி)	பகவல் முகுந்ததாஸ்	எம்.ஏ	1993
129.	மலரும் மாலையும் ஐந்திலக்கண ஆய்வு (144 வரையுள்ள பாடல்பகுதி)	குமார்	எம்.ஏ	1993
130.	மலரும் மாலையும் ஐந்திலக்கண ஆய்வு	சந்திரா	எம்.ஏ	1993
131.	மதுரை சொக்கநாதர் தமிழ்விடுதூது விளக்கவியல் இலக்கணமும் சொல்லடைவும்	சிதம்பரதாணுபிள்ளை	எம்.ஏ	1969
132.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (ஐந்தாம் அங்கம் மூன்றாம் களம்)	ராஜரத்தினம்	எம்.ஏ	1999

133.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (நான்காம் அங்கம் நான்காம் களம் நான்காம் அங்கம் ஐந்தாம் களத்தின் கடைசிப் பகுதி	உஷாகுமாரி	எம்.ஏ	1999
134.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு நான்காம் அங்கம் ஐந்தாம் களம்	ஜென்சிஸ்குமார்	எம்.ஏ	1999
135.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (நான்காம் அங்கம் மூன்றாம் களம் முழுவதும்)	வினிதாஜோஸ்	எம்.ஏ	1999
136.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (மூன்றாம் அங்கம் இரண்டாம் களம் முழுதும் மூன்றாம் களம் சிவகாமி சபதம் நீங்கலாக)	செல்வராணி	எம்.ஏ	1999

137.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (இரண்டாம் அங்கத்தின் மூன்றாம் களம் முதல் மூன்றாம் அங்கத்தின் முதல் களம் வரை)	நாகேஸ்வரி	எம்.ஏ	1999
138.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (இரண்டாம் அங்கம் முதற் களத்தில் 183 அடி முதல் 330 அடி வரையும் இரண்டாம் களம் முழுவதும்)	ஜெயகுமாரி	எம்.ஏ	1999
139.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (முதல் அங்கம் நான்காம் களம் 144 வரி முதல் இரண்டாம் அங்கம் முதற் களம் 182 வரையுள்ள பகுதி)	ஹெப்சிரோஸ்மேரி	எம்.ஏ	1999

140.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (முதல் அங்கம் மூன்றாம் களம் முதல் நான்காம் களம் 143 வரிகள்)	செலின்	எம்.ஏ	1999
141.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (நான்காம் அங்கத்தில் முதல் இரண்டு களங்கள்)	தேன்மொழி	எம்.ஏ	1999
142.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (பாயிரம் முதல் ஒன்றாம் அங்கம் இரண்டாம் களம் முழுதும்)	அஜி	எம்.ஏ	1999
143.	மனோன்மணீய நாடகம் ஐந்திலக்கண ஆய்வு (ஐந்தாம் அங்கம் ஒன்றாம் களம், இரண்டாம் களம்)	கவின்	எம்.ஏ	1999

144.	மனோன்மணீயம்திருக்குறள் மொழி ஆய்வு	நிர்மலா	எம்.ஏ	1971
145.	மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் உருபனியல் விளக்கம், சொல்லடைவு	கோவிந்தன்குட்டி	எம்.ஏ	1961
146.	முக்கூடற்பள்ளுஉருபனியல் விளக்கமும் சொல்லடைவும்	மாசில்லாமணி	எம்.ஏ	1961
147.	முததொள்ளாயிரம் விளக்கவியல் இலக்கணம்	கிருஷ்ணசாமி	எம்.ஏ	1964
148.	என்.மோகனின் ஐந்து சிறுகதைகள் மொழிபெயர்ப்பும் சொல்லடைவும்	விஜயகுமார்	எம்.ஃபில்	1999
149.	மௌனி சிறுகதை ஐந்திலக்கண ஆய்வு	சந்திரா	எம்.ஃபில்	1995

150.	யாருக்காக அழுதான் (ஜெயகாந்தன் நாவல்) இலக்கண விளக்கம்	இலின்டாகிறிஸ்ட்டி	எம்.ஏ	1971
151.	யாப்பருங்கலக்காரிகை உருபனியல் விளக்கம்	சூர்யா	எம்.ஏ	1962
152.	வீரசோழியம்உருபன் விளக்கமும் சொல்லடைவும்	வசந்தாகுமாரி	எம்.ஏ	1961
153.	வில்லிபாரதம்விளக்கவியல் ஆய்வும் சொல்லடைவும்	குற்றாலம்பிள்ளை	பி.எச்.டி	1976
154.	விவிலிய சங்கீதங்கள் மொழி ஆய்வு விளக்கவியல் இலக்கணமும் சொல்லடைவும்	மு. பிளாரன்ஸ்	பி.எச்.டி	1989
155.	விவிலியத்தின் பிரசங்கி இலக்கண ஆய்வும் சொல்லடைவும்	பியூலாரோஸ்லின்	எம்.ஃபில்	1996

சூடாமணி நிகண்டில் அகராதியியல் உத்திகள்

சு. சாரதா.

அகராதிகளும் நிகண்டுகளும்

ஒரு மொழியின் சொல்வளத்தைத் தெரிந்து கொள்ளவும் சொற்களின் பொருள் வீச்சைத் துல்லியமாகப் புரிந்து கொள்ளவும் நிகண்டுகளும் அகராதிகளும் உதவுகின்றன. சமூக வரலாற்றை அறிய இலக்கியங்களும் மொழியின் இலக்கண ஒழுங்கை அறிய இலக்கணங்களும் பயன்படுவதைப் போலச் சொற்பொருளை அறிய உதவும் அகராதிகள் இவ்விரண்டையும் விளங்கிக் கொள்வதற்கான கருவி நூல்களாய் உள்ளன. "மொழிப் பயன்பாட்டின் அடிப்படை கருத்துப் பரிமாற்றமே. இக்கருத்துப் பரிமாற்றம் நடைபெறாத இடங்களில் அகராதிகள் இடைநின்று பொருள் அறிவிக்கின்றன" என்று கூறுவர்.

கடினச் சொற்களுக்கு உரை கூறுபவை அகராதிகள். இலக்கணத்தின் பின்னிணைப்புத்தான் அகராதி என்பது மொழி அறிஞர் Bloomfield அவர்களின் கருத்து.

அகராதி என்பது கடினச் சொற்களுக்கு பொருள் தருகின்றது. பயின்று வராத அல்லது அதிகமாகப் பயிற்சியில் இல்லாத சொற்களை, தெரிந்தச் சொற்களைக் கொண்டு பொருள் விளக்கம் செய்தல் அகராதியின் நோக்கமாக உள்ளது. இத்தகைய அகராதி அமைப்பினின்றும் மாறுபட்டனவே நிகண்டுகள். கற்போர் கற்பிப்போர் மொழிப் பயனாளர் ஆகிய அனைவரும் மொழியைத் திறம்படக் கையாள நிகண்டுகள் உறுதுணையாக அமைந்துள்ளன. பாடல் புனைவோருக்குப் பெரிதும் உதவுபவை நிகண்டுகள். எதுகை மோனையுடன் பாடல் இயற்ற விரும்புவோர்க்கு நிகண்டுகள் பெரிதும் பயன்படும். ஒரு மொழியின் சொல்வளத்தைப் பாதுகாத்து வைத்திருப்பவை நிகண்டுகள். அருஞ்சொற்களுக்குப் பொருள் தெரிய உதவும் அகராதிகள் தமிழில் உருவாவதற்கு முன் நிகண்டுகளே இப்பணியைச் செய்து கொண்டு இருந்தன என்று கூறுவர்.

மொழிகளைப் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு மொழியியல் என்னும் பிரிவின் கீழ்ப் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த ஒரு துறை ஆகும். ஆயினும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மொழியியல்

பற்றிய எண்ணங்கள் தமிழ் மொழி வல்லுநர்களிடம் இருந்தது என்பதற்கு தொல்காப்பியம் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு. எழுத்துக்கள் பற்றியும் அவற்றின் பிறப்பு பற்றியும் தொல்காப்பியர் கூறும் கருத்துக்கள் தற்கால மொழியியல் அறிஞர்களுக்கு வியப்பைத் தருகின்றன என்பர்.

இதைப் போன்றே அகராதி பற்றிய சிந்தனைகளும் தொல்காப்பியரிடம் இருந்துள்ளன. தொல்காப்பிய உவமையியல் பிற்கால அணி இலக்கண வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைந்தது போன்று உரியியல் முதலிய சொற்பொருள் விளக்கும் இயல்கள் (இடையியல், மரபியல்) சொற்பொருள் கூறும் துறை நூல்களாகிய நிகண்டுகளுக்குக் களமாயின என்ற கூற்று உண்மையே. நிகண்டுகள், நிகண்டுகள் என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டது பிற்காலத்தில் தான். முற்காலத்தில் இந்நூல்கள் 'உரிச்சொல்' என்னும் பொதுப்பெயரால் வழங்கப்பட்டன என்னும் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

நிகண்டுகள் - விளக்கம்

நிகண்டு என்னும் வட சொல்லுக்குக் கூட்டம் அல்லது தொகுதி என்று பொருள். நிகண்டு நூலின்கண் சொற்கள் கூட்டமாகத் தொகுதியாக அமைக்கப்பட்டுப் பொருள் விளக்கப்படுவதால் நிகண்டு என்னும் பெயர் பெற்றதாக விளக்கம் கூறுவர். சொல்லுக்குப் பொருள் கூறும் பொருட்டுப் பின்னர் எழுந்த தனிநூல்கள் நைகண்டுகம் என்பதன் மூலச் சொல்லாகிய நிகண்டு என்னும் பொதுப் பெயரால் வழங்கப்பட்டன.

இச்சொற்கு இதுவே பொருள் என்று சொற்கும் பொருட்கும் உள்ள ஆற்றலாகிய நியமம் அறிவிக்கும் கருவி நூலாக நிகண்டுகள் விளங்குகின்றன. ஒரு பொருளைத் தரும் வேறுபட்ட சொற்கள் அனைத்தையும் தொகுத்துத் தருவதுதான் நிகண்டுகளின் தலையாய நோக்கம் எனலாம். இது தவிரப் பலபொருட் சொற்களையும் நிகண்டுகள் தொகுத்துத் தருகின்றன. எழுத்துப் பயிற்சியும் அச்சு வசதிகளும் இல்லாத ஒரு காலகட்டத்தில் மொழிப் பயிற்சிக்காக வடிவமைக்கப்பட்டது தான் நிகண்டு. எனவே எளிதில் மனனம் செய்யும் பொருட்டு ஓசை நயத்துடன் யாப்பு நலத்துடன் நிகண்டுகள் அமைக்கப்பட்டன. ஒரு பொருளுக்குரிய பல சொற்களையும், ஒரு சொல்லுக்குரிய பல பொருட்களையும் பல்வேறு தலைப்புக்களின் கீழ் தரும் செய்யுளாக இயற்றப்பட்ட அகராதி தான் நிகண்டு என்பர். யாப்பு நெறியில் சொற்பொருள் கூறும் தமிழ் நூல்கள்தான் நிகண்டுகள் எனவும் கூறுவர்.

ஒரு பொருளைக் குறிக்க எல்லோருக்கும் தெரிந்த ஒன்றிரண்டு சொற்களையே மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை விட அப்பொருள் குறிக்க வந்துள்ள அனைத்துச் சொற்களையும் வாய்ப்பு

நேரும்போதெல்லாம் பயன்படுத்தி மொழி வளத்தை மேம்படுத்த இலக்கிய வல்லுநர்களுக்கு நிகண்டுகள் பெரிதும் துணை நின்றன.

எட்டாம் நூற்றாண்டு தொட்டு தமிழில் நிகண்டுகள் தோன்றத் தொடங்கின. அகராதிகள் கி.பி.17 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் தோன்றத் தொடங்கியதாகக் கூறுவர். ஒரு மொழியும் அம்மொழியில் அமைந்துள்ள சொற்களும் நிலையானவையல்ல. காலம் செல்லச் செல்ல மொழியில் புதுப்புதுச் சொற்கள் வந்து சேருவது இயல்பு. ஒரு மொழியின் வளர்ச்சிக்கு இது தேவையும் ஆகும். இதைத் தான் தொல்காப்பியமும் "கடிசொல் இல்லை காலத்துப் படினே" என்ற சூத்திரத்தில் விளக்குகின்றார். காலந்தோறும் புதுப்புதுச் சொற்கள் மொழியில் வந்து கலப்பதும் பழைய சொற்கள் பல வழக்கொழிந்து போவதும் இயல்பு என்பதை நன்னூலாரும் எடுத்துக் கூறுகின்றனர். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பது நன்னூல் நூற்பா.

ஒரு மொழியில் காலந்தோறும் புதுப்புது அகராதிகள் தோன்றுவதற்கான காரணங்களுள் ஒன்று இதுவேயாகும். புதிய சொற்களைச் சேர்த்தல், புது முறைகளைக் கையாள்தல், பயன்படுத்துவோருக்கு எளிமையாக அமைத்தல் போன்ற நிலைகளில் அகராதிகள் காலந்தோறும் புதுமையாக அமைகின்றன. பள்ளி மாணவர்களுக்கு, கல்லூரி மாணவர்களுக்கு, சாதாரண வாசகர்களுக்கு என்ற நிலைகளில் பயன்பாட்டாளரின் தேவைகளுக்கு ஏற்பவும் அகராதிகள் அமைக்கப்படுகின்றன. அகராதிகளில் விளக்கப்படங்கள் கொடுப்பதையும் பிற்காலத்தில் புதுமையாகக் கொண்டனர். வடிவமைப்பிலும் அகராதிகள் காலந்தோறும் பல்வேறு வடிவங்களைப் பெற்று வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, கையடக்க அகராதி போன்றவற்றைக் கூறலாம். கணிப்பொறியின் வருகைக்குப் பின்னால் அகராதிகள் புதுத் தோற்றப் பொலிவுடன் வந்து கொண்டிருக்கின்றன.

அகராதிகளின் முன்னோடியாக விளங்கிய நிகண்டுகளும் காலந்தோறும் மாறுபட்ட நிலைகளில் வெளிவந்துள்ளன.

சூடாமணி நிகண்டு

தமிழில் தோன்றிய முதல் நிகண்டு திவாகரம். இதற்குப் பின் தோன்றிய பிங்கலந்தை போன்ற நிகண்டுகள் கற்போருக்குக் கடினமாக இருந்ததால் எளிமை கருதி இந்நிகண்டை ஆக்கியதாக ஆசிரியர் பாயிரத்தில் குறிப்பிடுகின்றார்.

"செங்கதிர் வரத்திற் றோன்றுஞ் திவாகரன் திவாகரன் சிறப்பின் மிக்க
பிங்கலர் உரை நூற் பாவில் பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டுங் கற்க வெளிதல"

என்பது பாடல். சொல்லுகின்ற முறையில் எளிமையைப் பின்பற்றிய

மண்டல புருடர் பிங்கலந்தையிலுள்ள பொருட்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு நூலின் அமைப்பு முறையில் திவாகரத்தை அப்படியே பின்பற்றியுள்ளார் என்பதை,

"வருமுறை திவாகரம் போல் வைத்து பிங்கலந்தை தன்னில்
ஒருங்குள பொருளும் ஓர்ந்திட்டு உரைத்தனன் விருத்தம் தன்னில்"

என்ற பாயிரப் பாடலால் உணர்ந்து கொள்ளலாம்.

சூடாமணி நிகண்டு பன்னிரண்டுத் தொகுதியைத் தன்னகத்தே கொண்டு அமைவது. அவையாவன:

1) தேவப் பெயர்த் தொகுதி 2) மக்கட் பெயர்த் தொகுதி 3) விலங்கின் பெயர்த் தொகுதி 4) மரப்பெயர்த் தொகுதி 5) இடப்பெயர்த் தொகுதி 6) பல்பொருட் பெயர்த் தொகுதி 7) செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி 8) பண்பு பற்றிய பெயர்த் தொகுதி 9) செயல் பற்றிய பெயர்த் தொகுதி 10) ஒலி பற்றிய பெயர்த் தொகுதி 11) ஒரு சொற் பல்பொருள் தொகுதி 12) பல்பெயர் கூட்டத் தொரு பெயர்த் தொகுதி என்பனவாகும். இப்பன்னிரண்டு பகுதிகளை ஒரு பொருட் பல் பெயர்த் தொகுதி, ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதி, பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி என்ற மூன்று பிரிவுகளாகக் கூறலாம்.

இப்பன்னிரண்டு தொகுதிகளிலுமாக 1197 விருத்தப்பாக்களால் சொற்பொருளை விளக்குகிறார். அகராதி என்ற நிலையில் பார்க்கும் போது 8446 சொற்களுக்குப் பொருள் நவிலப்படுமாற்றைப் பார்க்கலாம். தலைப்புப் பெயர்கள் என்ற நிலையில் 3794 பெயர்கள் இடம்பெறுகின்றன.

அகராதியியல் நெறிமுறைகள்

Lexicography என்பதற்கு தமிழில் அகராதித் தொகுப்பு முறை என்று கூறுவர். அகராதிகளை உருவாக்கச் சில அடிப்படை நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இவற்றை அகராதியியல் உத்திகள் என்று கூறலாம்.. தலைச்சொல் தேர்வு (Head word), சொல் மூலம் அல்லது சொற்பிறப்பு, ஒலிப்பு முறை (Pronunciation), எழுத்து முறை (Spelling), இலக்கணப் பொருள், சொற்பொருள், சொற்பொருள் வரிசை முறை, தலைச் சொல்லுக்கான வழக்குப் பயிற்சி, குறிப்பான்கள்(Lables) மேற்கோள்கள் என்ற வரிசை முறையில் அகராதியில் ஒவ்வொரு சொல்லும் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றுள் ஒலிப்பு முறை ஆங்கில அகராதிகளில் முக்கிய இடம் பெறுகின்றது. தமிழில் ஒலிப்பு முறை விளக்கம் தேவையில்லை என்றே கூறலாம்.

அகரத்தை முதன்மையாகக் கொண்டு அகர வரிசைப்படி

சொற்களை அமைத்துப் பொருளைத் தரும் நிலையில் அகராதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அகராதி என்ற பெயரே இதைத்தான் உணர்த்துகிறது. அகரத்தை ஆதியாகக் கொண்டது என்பது பொருள். இதனை அகர முதல என்றும் குறிப்பிட்டனர்.

நிகண்டுகளே அகராதிகளின் முன்னோடி என்றாலும், அகராதிகளின் அதே அமைப்பு முறையில் நிகண்டுகள் அமையவில்லை. நிகண்டுகள் மனனம் செய்து புரிந்து கொள்வதற்காகவே எழுதப்பட்டவை. ஆனால் அகராதிகளோ பார்வை நூலாக அமைக்கப்பட்டவை. எனவே நிகண்டுகளில் அகராதிகளைப் போல் சொற்கள் அகர வரிசையில் கொடுக்கப்படவில்லை எனலாம்.

சூடாமணி நிகண்டு-உத்திகள்

நிகண்டுகள் அகராதியைப் போல் தற்கால மொழியியல் அறிவியல் ரீதியாக அமையவில்லை என்பதும் சில நெறிமுறைகளின் உத்திகளின் அடிப்படையில் தான் படைக்கப்பட்டுள்ளன என்பதும் உண்மை.

பொருட்களை உயர்திணை அஃறிணை எனப் பாகுபடுத்தி பொருள் கூறுகின்றார்.

இந்நிலையில் சூடாமணி நிகண்டில் தேவப் பெயர்கள் முதலில் இடம் பெறுகின்றன. தேவர்களில் அருகக் கடவுளுக்குரிய பிறபெயர்கள் முதலில் தரப்படுகின்றன. நூலாசிரியர் சமண மதத்தைச் சார்ந்தவராதலால் சமணமதக் கடவுளாகிய அருகனை முதலில் குறிப்பிடுகிறார். இதன் பிறகு சிவன், அரி, பிரம்மன் ஆகிய மும்மூர்த்திகளின் பெயர்கள் தரப்படுகின்றன. தொடர்ந்து இந்திரன், விநாயகர், கந்தன், காமன், வைரவன், குபேரன், யமன் முதலானவர்கள் பெயர்கள் தரப்படுகின்றன. ஆண் தெய்வங்களின் பெயர்களைத் தொடர்ந்து பெண் தெய்வங்களின் பெயர்கள் தரப்படுகின்றன. பெண் தெய்வங்களில் முடிதரித்தவளாகிய தரும தேவதையின் பெயர் முதலில் தரப்படுகின்றது. தொடர்ந்து உமை, கங்கை, திருமகள், நாமகள், காளி முதலான பெண் தெய்வங்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. இதனைத் தொடர்ந்து பஞ்ச பூதங்களின் பெயர் சூரியன் பெயர், நவக்கிரகங்களின் பெயர், நட்சத்திரங்களின் பெயர், மேகம், இடி முதலியவற்றின் பெயர்கள் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தேவர்கள் பெயரும் தேவர்கள் வாழ்கின்ற இடமாகக் கருதப்படுகின்ற விண்ணுலகத்தின் பெயரும் விண்ணுலகத்தில் இயங்கும் பொருட்கள் சக்திகள் ஆகியவற்றின் பெயர்களும் ஒரு குறிப்பிட்ட நிலையில் வரிசைப்படுத்தப்படுகின்றன. வழிபடும் தெய்வம், மும்மூர்த்திகள், சிறு தெய்வங்கள், பஞ்சபூதங்கள், நவக்கிரகங்கள், நட்சத்திரங்கள் என்ற நிலையில் தெய்வத்தோடு தொடர்புடைய

பெயர்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன. ஆணுக்குப் பின் பெண் என்ற முறையும் பின்பற்றப்படுகிறது.

தெய்வப் பெயர்களைத் தொடர்ந்து மக்கட்பெயர்த் தொகுதி இடம்பெறுகின்றது. முனிவர், சமணப்பெரியார், சைவப்பெரியார்கள், வைஷ்ணவர்கள், அகத்தியன் முதலான முனிவர்கள், அரசர்கள், பஞ்சபாண்டவர்கள், துரியோதனன், சேர, சோழ பாண்டியர்கள், குறுநில மன்னர்கள், படைத்தலைவர்கள், நிமித்திகன், கணக்கர் முதலான அரச அவையினர், வைசியர், வேளாளர் சூத்திரர் முதலான இனத்தவர்கள், மருத்துவர், கொல்லர், தச்சர், தட்டார், சிற்பி, கன்னார், வண்ணார், நாவிதர், பாணர் முதலான பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு இருப்போர், குருடர், செவிடர், ஊமை, கொலையாளி, வஞ்சகன், பகைவர், அமங்கலி, வேசை முதலான கீழோர், ஐவகை நிலத்தில் வாழ்பவர்கள், உறவுப்பெயர்கள் உடல் உறுப்புகளின் பெயர்கள் என்ற வரிசையில் மக்கட் பெயர்த் தொகுதி அமைந்துள்ளது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், சூத்திரர் என்ற பழங்கால வர்ணப் பாகுபாட்டின் அடிப்படையிலேயே பெயர்கள் வரிசைப்படுத்தும் முறையை இவ்வாசிரியர் பின்பற்றியுள்ளார். இவர் சமணர் என்பதால் சமண முனிவர்களின் பெயர்களை முதலில் தந்துள்ளார். பஞ்ச பாண்டவர்களில் முதல்வனாகிய தருமனைச் சொல்லிவிட்டு அதற்கடுத்த நிலையில் கௌரவர் தலைவனாகிய துரியோதனன் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். அதன் பின்னரே கர்ணன், பீமன், அருச்சுனன் பெயர்கள் தரப்பட்டுள்ளன. பஞ்சபாண்டவர்களில் இருவராகிய நகுலன், சகதேவன் பெயர்கள் தரப்படவில்லை. திரௌபதி முதலான பெண்கள் பெயர்கள் தரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற தேவப் பெயர்களிலோ, மக்கட்பெயர்களிலோ இராமன், இலக்குமணன், சீதைபெயரும் தரப்படவில்லை. ஆனால் ஒரு சொற் பல்பொருட் தொகுதியில் சீதை என்ற சொல்லைக் குறிப்பிடும்போது "சீதையே பொன்னாங்காணி படைசால் சீராமன் தேவி" என்ற இடத்தில் சீதையின் பெயரும் இராமர் என்ற பெயரும் இடம் பெறுகின்றன.

உடல் உறுப்புக்களின் பெயர்களைக் கூறும்போது பாதாதிகேசம் என்ற வரிசை முறையில் உறுப்புக்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. தெய்வங்களை வருணிக்கும்போது கேசாதிபாத வரிசையிலும் மக்களை வருணிக்கும்போது பாதாதி கேச வரிசையிலும் பாடுவது மரபு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மக்களை அடுத்து விலங்குப் பெயர்கள் இடம் பெறுகின்றன. இப்பகுதியில் சிங்கம், புலி, யானை, குதிரை, ஆண், பெண்பிள்ளை, விலங்குப் பெயர்கள், விலங்குகளின் உறுப்புக்கள், பாம்பு முதலான ஊர்வன, பறவை இனங்கள், வண்டு, கொசு முதலான சிறுபூச்சிகள்,

மீன், முதலை, ஆமை முதலான நீர்வாழ் உயிரினங்கள் என்ற வரிசையில் விலங்குப் பெயர்கள் அமைந்துள்ளன. யானை, குதிரை முதலான விலங்குகளைக் குறிப்பிடும் போது அவ்விலங்குகளின் பல்வேறு உறுப்புக்களின் பெயர்களையும் ஆங்காங்கு குறிப்பிட்டுச் செல்லுகின்றார். காட்டு விலங்குகள், நாட்டில் வாழ் விலங்குகள், ஊர்வன, பறவை, நீர்வாழ் உயிரினங்கள் என்ற வரிசை முறையை இங்கு பின்பற்றியுள்ளார்.

மரப்பெயர்த் தொகுதியில் ஐந்தருக்கள், சந்தனம், அகில், மா, பலா, வாழை, செடி, கொடிகள், தானியப் பயிர்கள், நீர்வாழ் செடிகள் என்ற வரிசையில் பெயர்கள் தரப்பட்டுள்ளன. பெருமரங்கள், சிறுமரங்கள், செடிகொடிகள், தானியப் பயிர்கள் என்று வரிசைப்படுத்தியிருப்பது நோக்கத்தக்கது.

இடப்பெயர்த் தொகுதியில் தேவலோகம், நரகம், திசைப்பெயர்கள், குறிஞ்சி முதலான ஐவகை நிலப்பெயர்கள், ஊர், கிராமம், தெரு, வீடு, வீட்டின் உட்புறம் என்ற அகன்ற நிலப்பரப்பிலிருந்து சிறிய வீடு வரையிலான இடங்களின் பெயர்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன.

பல்பொருட் பெயர்த் தொகுதியில் பொன், பஞ்சலோகம், நவமணி, வெள்ளி, பித்தளை, இரும்பு முதலான உலோகங்களின் பெயர்கள் முதலிலும் கற்பூரம் முதலான மணப்பொருட்கள் அதனை அடுத்தும் தொடர்ந்து உணவுப் பொருட்களின் பெயரும் தரப்படுகின்றன. பொருட்களின் மதிப்பு, அருமை, பயன் என்ற நிலையில் இவை வரிசைப்படுத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

செயற்கை வடிவப் பெயர்த் தொகுதியில் படைக்கலன்கள், ஆபரணங்கள், இசைக்கருவிகள், வாகனங்கள், வீட்டுச் சாமான்கள், உடைகள் என்ற வரிசையில் பெயர்கள் அமைந்துள்ளன. வட்டம், திரட்சி, கூட்டம், விரிவு, பரப்பு, பெருமை, நுண்மை,அளவு, நிறம், பல்வேறு குணங்கள் என்ற வரிசையில் பண்புப் பெயர்த் தொகுதியை அமைத்துள்ளார்.

செயல் பற்றிய பெயர்த் தொகுதியில் விளையாட்டு, திருமணம், உண்ணுதல், உறங்குதல், முதலான செயல்கள் வரிசைப்படுத்தி அவற்றிற்குரிய பெயர்கள் கூறப்படுகின்றன.

ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் சொல், வாசகம், வாழ்த்துதல், பழித்தல், மெய், பொய், சொல் வகைகள், பல்வகைப் பாக்கள், இசைப் பெயர்கள் என்ற வரிசையில் ஒலியோடு தொடர்புடைய பெயர்கள் இடம்பெறுகின்றன.

ஒரு சொல் பல்பொருட் தொகுதியில் க, ங, ச, ஞ, ட, ண . . .

. .ன என்ற மெய் எழுத்துக்களை வரிசைப்படுத்தி எதுகை முறையில் சொற்களை அமைத்துப் பொருள் தருமாற்றைக் காணலாம். இங்கு க, கா, கி, கீ என்ற வரிசை அமைப்பு பின்பற்றப்படவில்லை. இவை மாறி மாறியே வருகின்றன. கலப்பு எதுகைகளும் பலவிடங்களில் வருமாற்றைக் காணலாம். மெய்யெழுத்துக்களை வரிசைப்படுத்தி எதுகை முறையைப் பின்பற்றிப் பொருள் கூறுகின்றனர். 309 விருத்தப்பாக்களுடன் தலைப்புச் சொற்களைக் கொண்டுள்ளது இத்தொகுதி. சூடாமணி நிகண்டின் பன்னிரண்டு தொகுதிகளிலும் சிறப்பும் பிரபலமும் அடைந்துள்ளது இத்தொகுதியே ஆகும். இத்தொகுதிக்கு மட்டுமாகக் கணக்கற்ற பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

இறுதியாக அமைகின்ற பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதியில் இரண்டு மூன்று நான்கு என்றவாறு எண் வரிசையில் தொகைப் பெயர்கள் வரிசைப்படுத்தப் படுகின்றன.

ஓர் அகராதியில் இடம் பெற வேண்டிய சொற்களைத் தேர்ந்து எடுப்பதிலும் சில நெறிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. பயன்பாட்டாளரின் தன்மைக்கும் தேவைக்கும் ஏற்பச் சொற்கள் கூடியும் குறைந்தும் அமையலாம். அகராதியில் ஒரு மொழியின் அனைத்துச் சொற்களும் பதிவுகளாய்த் தரப்படுவதில்லை. அகராதிக்கான சொல்தேர்வு வரையறுத்த நெறியுடன் செய்யப்பெறுகின்றது என்பது அகராதியியலார் கருத்து. அகராதிச் சொல்லாய் தெரிவு செய்யப் பெறும் சொல் வழக்குப் பயிற்சி உடையதாய் இருக்கவேண்டும் என்பது பொது நெறி. சூடாமணி நிகண்டு ஆசிரியரும் தலைச் சொற்களைத் தேர்வு செய்வதில் இந்நெறி முறைகளைப் பெரும்பாலும் பின்பற்றியிருப்பதைக் காணலாம். அருகதேவனின் பிற பெயர்களாக 90 பெயர்கள் கூறப்படுகின்றன. இவற்றுள் அருகன் என்ற பெயரே மிகவும் அதிகப் பயிற்சி வழக்குடைய பெயர். எனவே அருகன் என்ற பெயரையே இவரும் தலைச் சொல்லாகத் தந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்றே சிவன், அரி, விநாயகன், கந்தன், குபேரன், யமன், உமை, கங்கை போன்ற பெயர்களையும் தலைச் சொல் பெயர்களாகத் தந்துள்ளார். இதுபோன்றே ஒரு சொல் பல பொருள் பெயர்த் தொகுதியிலும் பகவன், நகை, திகிரி, பாகம், சங்கம், பசு, குடம், மாடு, உடை என்றெல்லாம் அதிகமாகப் பழக்கத்திலுள்ள சொற்களையே தலைச் சொல்லாகத் தேர்ந்தெடுத்து அதற்குரிய பல்பொருள்களைத் தருகின்றார்.

அகராதியில் ஒரு சொல்லுக்குரிய பல்வேறு பொருட்களைத் தரும்போது அவற்றை எண்ணிக்கையிட்டுக் குறிப்பிடுவதைக் காணலாம். மண்டல புருடரோ பெயர் எண்ணிக்கையைத் தரும் பாங்கைப் பலவிடங்களிலும் காணலாம்.

(எ.டு) "...... சிவன் பெயர் அறுபத்தாறு"
"உமை பெயர் மூவைந்தாமே"
"ஈரெட்டும் திருமகள் நாமம்"
'நெருப்பின் பெயர் ஆறைந்தாமே"
"அரசன் பெயர் ஈரெட்டாம்"

போன்றவற்றை எடுத்துக்காட்டாய்க் கூறலாம்.

சொல்வகைகள்:

சூடாமணி நிகண்டில் அகராதியியல் உத்திகளைக் காண முயலும் போது Synonym, Homonym, Groupnames என்ற இவற்றையும் இவற்றின் உட்பிரிவுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பொருட் பன்மொழியும்(Synonym):

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்களின் ஒத்த பொருளியல்பு ஒரு பொருட் பன்மொழியாம். சூடாமணியில் முதல் பத்துத் தொகுதிகளும் இத்தன்மைத்தே.

(எ.டு) திருமகள் பெயர் - கடற்பிறந்த கோதை, மா, அரிப்பிரியை, செய்யாள், ஆக்கம், பொன், பொறி, சீதேவி, அலர்மகள், பொருளின் செல்வி, தாக்கணங்கு, இளையாள், பூமின், இலக்குமி, சலசை, இந்திரை

பண்டிதர் பெயர் - கலைஞர், மேதையர், மூத்தோர், கற்றவர், அவை விற்பன்னர், கவிஞர், சங்கம், சாரதி, சூரி, சாடு, புலவர், அறிஞர், புதர்

உடைவாளின் பெயர் - குறும்பிடி, சுரிகை

சூடாமணி ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதிச் சொற்களையும் அவற்றிற்குரிய வேறுபட்ட பொருட்களையும் தொகுத்துத் தருகின்றது.

ஒரு சொல் பல்பொருள்(Homonym) :

ஒரு சொல் பலபொருள்களை உணர்த்தி வருவது ஒருசொல் பல்பொருளாகும். இவ்வாறு வரும் பொருள் தொடர்புடையதாக இருப்பதில்லை.

(எ.டு) சந்தம் - நிறம், அழகு, கவிதை, சந்தனம்

பூ - மலர், அழகு, கூர்மை, பொலிவு, பிறப்பு, பூமி

. ஒரு சொல் தொடர்புடைய பலபொருட்களை உணர்த்துவதும் உண்டு. இத்தகைய சொற்களைப் பொருட்பன்மை(Polysemy) என்று குறிப்பிடுவர்.

(எ.டு) மாய்வு - மறைவு, சாவு

ஆகு - எலி, பெருச்சாளி

மேலும் பலபொருட் சொற்களை நேர்பொருள்(Direct Sense), மாற்றப்பொருள்(Transferred sense), சிறப்புப்பொருள்(Specialized Sense), அணிநயப் பொருள்(Figurative sense), தற்காலிகப் பயன்பாட்டுப் பொருள்(Occasional Signification) எனவும் வகைப்படுத்தியுள்ளனர்.

பல்பெயர்க் கூட்டத் தொருபெயர்த்தொகுதி (Group Name or Collective Terms)

சூடாமணி நிகண்டிலுள்ள பன்னிரண்டாம் தொகுதியாக அமைந்துள்ள பல்பெயர்கூட்டத் தொரு பெயர்த் தொகுதி இத்தகையப் பெயர்களைத் தொகுத்துத் தருகின்றது.

(எ.டு) நவரசம் - சிங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, குற்சை, அற்புதம், பயம், கோபம்

நால்வகை உபாயம் - சாமம், பேதம், தானம், தண்டம்

முடிவுரை:

சூடாமணியில் அமைந்துள்ள முதல் பத்துப் பெயர்த்தொகுதிகளும் ஒரு பொருளையும் அப்பொருளுக்குரிய வேறு பெயர்களையும் தொகுத்துத் தருகின்றன. இவ்வாறு தரும்பொழுது அப்பொருளோடு தொடர்புடைய செய்திகள் வருமிடங்களில் அவற்றை விளக்கமாகவும் தந்து செல்கின்றார்.

காற்றின் பெயர்களைத் தொகுத்துக் கூறியதன் பின் மேற்காற்று, கீழ்க்காற்று, வாடை, சுழல்காற்று, தென்றல் இவற்றின் பெயர்களையும் தருகின்றார்.

சங்கின் பெயர்களாக நந்து, சுத்தி, நாகு, வளை, கம்பு, கோடு, வாரணம், வண்டு, இடம்புரி, வெள்ளை என்ற பெயர்களைத் தருகின்றார். இதையடுத்து வலம்புரிப் பெயர், இடம்புரி, பாஞ்சசன்னியம், சலஞ்சலம் என்று சங்கோடு தொடர்புடைய பெயர்களின்

விளக்கத்தையும் தருகின்றார். இதுபோன்று அமைகின்ற பகுதி சொற்களுக்குரிய பொருளை விளக்குவதாக அமைகின்றது. இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி என்றும், இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி என்றும் வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது சலம்சலம் என்றும் விளக்கம் தருகின்றார்.

சில அருஞ்சொற்களுக்குப் பொருள் தரும் நிலையில் இதுபோன்ற பகுதிகள் அமைந்துள்ளன.

பண்பு பற்றிய பெயர்களைக் கூறும் பகுதியில் பழமை, புதுமை, அறிவு, அறிவின்மை, இனிமை, கைப்பு, உயர்வு, தாழ்வு, உண்மை, பொய் போன்ற நிலைகளில் எதிர்ச்சொல் அமைப்பில் பொருட்களைத் தருகின்றார்.

சூடாமணியில் அமைந்துள்ள சொற்களையும் அவற்றிற்கான பொருளையும் மொத்தமாகப் பார்க்கும் போது அரசர்களுக்கும் புலவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இந்நிகண்டு யாத்திருப்பதாகத் தோன்றுகிறது.

இயல் இசை வல்லோர் கேட்ப(பாயிரம் - 6) இந்நிகண்டை யாத்ததாக ஆசிரியர் பாயிரத்தில் குறிப்பிடுகின்றார். அரசர்களுக்கும் அரசர்கள் தொடர்பான செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதைப் பலவிடங்களில் காணலாம். அரசர்க்குரிய இருபத்தொரு வகைச் சின்னம், அரசர்க்குரிய எண் பேராயம், அரசவை உறுப்பினர்கள் இவற்றையெல்லாம் விரிவாகக் கூறுகின்றார். இதுபோன்றே செய்யுளுக்குரிய எண் வகை அசை, நல்லாசிரியன் இலக்கணம், இருபத்தெட்டுச் செய்யுள் அலங்காரம், புலவர் கவிதையை அரசர் அங்கீகரிக்கும் முறை, பரிசில் கொடாத உலோபியர்க்குச் செய்யுட் செய் வகை ஆகியவற்றையும் சிறப்புப்படுத்திப் பேசுகின்றார்.

இடைக்காலத்தில் செய்யுளின் உள்ளடக்கத்தை விட உருவ அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை வளர்ச்சி அடைந்தது. சிலேடை முதலான செய்யுள் அமைப்புக்கள் பெரும்பான்மையாகத் தோன்றத் தொடங்கின. மொழியின் பல்வேறு விளக்கங்களையும் மேன்மையையும் எடுத்துக் கூறுவதற்கென்றே பாடல்கள் தோன்றத் தொடங்கின. இந்நிலையில் ஒரு பொருள் பல்பெயர், ஒரு சொல் பல்பொருள் ஆகியவற்றைத் தொகுத்துத்தரும் நிகண்டுகள் முக்கியத்துவம் பெற்றன. அகராதிகள் கடினமான அல்லது அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுவதற்காக அமைந்தவை. ஆனால் நிகண்டுகளோ சொல் வளத்தைப் பெருக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டவை. அகராதிகள் பார்ப்பதற்கு எளிதான முறையில் அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால்

நிகண்டுகளோ மனனம் செய்யும் நோக்கத்தில் செய்யுள் வடிவில் அமைந்தவை. அகராதிகளை உருவாக்குவதற்கு அடிப்படையான சில நெறிமுறைகள் உள்ளன. இந்நெறிமுறைகள் தற்காலத் தேவைக்கேற்பத் திட்டமிட்ட முறையிலும் அறிவியல் ரீதியாகவும் அமைந்திருக்கக் காணலாம். ஆயின் நிகண்டுகளில் இதுபோன்ற அறிவியல் ரீதியிலான நெறிமுறைகளைக் காணவியலாது. எனினும் காலகட்டத்திற்கும் தேவைக்கும் வசதிக்கும் ஏற்றவாறு சிலநெறிமுறைகளைப் பின்பற்றியே நிகண்டுகளை யாத்தனர் என்பதில் ஐயமில்லை. பண்பாடு, மரபு, பெருமை, சிறுமை, நிலை, விலை, மதிப்பு உயர்வு, தாழ்வு, பயன் முதலான சில பண்புகளை மனதில் கொண்டு அதற்கு ஏற்றபடி சொல்லையும் பொருளையும் தேர்வு செய்து வரிசைப்படுத்தி நிகண்டுகளை அமைத்திருக்கின்றனர் என்று கூறலாம். இந்நிலையில் சொற்பொருள் களஞ்சியமாக விளங்கும் நிகண்டுகள் பண்பாட்டின் சின்னமாகவும் விளங்குகின்றன எனலாம்.

பயன்பட்ட நூல்கள்

1. *சூடாமணி நிகண்டு மூலமும் உரையும்*, ஆறுமுக நாவலர் பதிப்பு, கழக வெளியீடு, 1969
2. *சூடாமணி நிகண்டு ஓர் ஆய்வு*, சு. சாரதா, பி.எச்.டி ஆய்வேடு, கேரளப் பல்கலைக்கழகம்,1995
3. *சூடாமணி நிகண்டு(பதினொன்றாம் தொகுதி*, ஒரு சொல் பலபொருள் விளக்கம்) பதிப்பாசிரியர் மு. சண்முகம் பிள்ளை, இ. சுந்தரமூர்த்தி, 1998
4. *அகராதியியல்*, முனைவர். பெ. மாதையன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1997
5. **An Introductory Text Book of Linguistics & Phonetics**, Redhey L. Varahney, 1977.

Valedictory Address

P. R. Subramanian

Yesterday and today we have been listening to and discussing various aspects of Tamil-Malayalam bilingual lexicography. As we all know, among the South Dravidian languages Tamil and Malayalam are closely related. Even for this genetically related languages there is no good dictionary on modern lexicographic principles. Will there be one in the near future? We are glad to hear that a Malayalam-Tamil dictionary is in progress at the Calicut University. What about Tamil-Malayalam dictionary? We talked about it and we hope it will be taken up by some one.

Every language organizes its semantic system in its own way. In genetically related languages, it is assumed that there will be a common core in their semantic systems, hence it may be relatively easier to find the equivalents. Our discussions prove that it may not be that easy. It would be interesting and rewarding to share our lexicographic problems with Scandinavian lexicographers. Their languages - Danish, Swedish and Norwegian - are as closely related with one another as that of ours.

The Seminar is over, the curtain will fall in an hour's time. The question before the host, the Department of Tamil, is: What next?. This Department has a rich lexicographic tradition left behind by Prof. Vaiyapuri Pillai, the doyen of Tamil lexicography, and Prof. V. I. Subramoniam, the trend-setter of indices to classical texts. But tradition should not become a burden. It should not be viewed as an yoke to which the successors are fastened to. It is a mental state that will make you feel more responsible and answerable to your actions. The feeling of responsibility and accountability will make the staff of the Department hesitant to take the plunge into the dictionary making. That is perfectly understandable.

Dr. Nachimuthu and his experienced colleagues decided in favour

of making a dictionary, I take this opportunity to offer some suggestions. I worked in an Indological Institute outside India, in the project of an University of Tamilnadu and now in close connection with an excellent publisher whose academic bend of mind is classy. So my suggestions carry some conviction.

Here are the suggestions :

1. Dictionary making needs constant attention and systematic working. So, make sure whether you can allot time out of your tight teaching schedule.
2. Dictionary making is essentially a disciplined work of a small team. Can you constitute a small team, the members of which love to work spontaneously?
3. People who are working in the team or contributing from outside will easily be offended if due credits are not given to them. Inner cohesion is essential for smooth progress. The absence of names on the credit page will cause heartburns. It is said of Noah Webster, that he was highly individualistic and was unwilling to acknowledge the assistance of his collabrators. Give every one his/her due credit.
4. Respect the traditional scholars. The traditional scholarship has lot of wisdom that needs to be analysed and put into a frame work.
5. We often hear Lexicography needs Linguistics. But it is not a one-way traffic. Lexicographic data will serve as an antidote to excessive theorizing in Linguistics. So, it is also true Linguistics needs Lexicography.
6. Many times in the past I have invited linguists for discussion. They were happy in our midst. But they are not consulted in their University by lexicographic people. You can break the barrier and invite a like minded linguist for consultation.
7. The technological giant, computer is necessary to lessen your manual labour. With a programmer's help indexing, alphabetizing, etc. can be made possible. If the programme is good, computer does excellent job. At the same time it will also create lot of problems that have to be attended every

now and then. It is not wise to resort to the messy business of heaping slips.

8. A small project, where you can ensure quality, is superior to an ambitious project that may be abandoned later for lack of progress or funds. A small project completed in time will instill confidence to take up a larger project. Small success leads to great victory. In this respect we need not follow Thiruvalluvar who says:

   "Better to hold the spear that missed an elephant

   Than the arrow that killed a hare"

9. You have invited me and many other scholars for this seminar. What can we offer you in return? We can give some ideas but it is left to you to make use of us the best possible way. In my opinion, the invitees to a serious seminar like this should make a pledge to the host that they will help in the hour of need.

10. Out of the usage of people lexicographers make a dictionary, then they give it back to the benefit of the people. In that respect the end product Dictionary is a language document with social relevance. Let us view the dictionary as a facilitator, not a cane-in-hand headmaster.

"I know of no more enjoyable activity than working on a dictionary. . . . lexicography rarely sends one on fuitless quests. . . . Every day one is confronted by new problems, usually small but absorbingly interesting, at the end of the day one feels healthily tired, but content in the thought that one has accomplished something and advanced the whole work towards its completion".

J.R. Hulbert, Collaborated with Sir William Craige in the making of *A Dictionary of American English* (1938-44).

தமிழ் மலையாளம் அகராதியியல் கருத்தரங்கு 2000 பிப்ரவரி 23–24

அறிக்கை

திருவனந்தபுரத்திலுள்ள காரியவட்டம் கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 2000 ஆண்டு பிப்ரவரி 23 , 24 புதன் வியாழனன்று தமிழ் மலையாளம் அகராதியியல் கருத்தரங்கு சிறப்பாக நடந்தேறியது. இதில் புகழ் பெற்ற அகராதியியல் அறிஞர்கள்,மொழியியலாளர்கள் தமிழ் மலையாள அறிஞர்கள் 25க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.தமிழிலும் மலையாளத்திலும் அகராதி தயாரித்தல் பற்றியும் தமிழ் மலையாளம் மலையாளம் தமிழ் அகராதிகள் தயாரிப்பது பற்றியும் ஆறு அமர்வுகளில் இக்கருத்தரங்கில் விரிவாக விவாதிக்கப்பட்டன.

பிப்ரவரி 23 ஆந்தேதி புதன்கிழமை காலை காரியவட்டத்திலுள்ள தமிழ்த்துறையில் கேரளப்பல்கலைக்கழகத் துணைவேந்தர்முனைவர் என்.பாபு தலைமையில் கருத்தரங்கத் தொடக்கவிழா நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.நாச்சிமுத்து வரவேற்புரையாற்றினார்.கேரளப்பல்கலைக் கழக முன்னாள் மலையாள அகராதித் துறைத் தலைமைப்பதிப்பாசிரியர் முனைவர் பி.சி. பாலகிருஷ்ணன் தொடக்கவுரையில் தமிழும் மலையாளமும் மிக நெருங்கியிருந்தும் இன்னும் இருமொழிகளிடையே அகராதி இல்லாத குறையைப் போக்கத் தமிழ்த்துறை முயல்வது பாராட்டுக்குரியது என்றார்.கேரளப்பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் கே.சசிகுமார்,மொழியியல் துறைத்தலைவர் முனைவர் ஜி.கே.பணிக்கர், மலையாளத்துறைத்தலைவர் முனைவர் என்.ஆர்.கோபிநாத பிள்ளை,சமஸ்கிருதத் துறைத்தலைவர் முனைவர் டி.தேவராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.தமிழ்த்துறைப்பேராசிரியை முனைவர் எல்.குளோறியா சுந்தரமதி அவர்கள் நன்றி நவின்றார்கள்.

அன்று காலை11.30 முதல் 1மணி வரை நிகந்த தமிழ் மலையாள அகராதியியலின் அண்மைக்காலப் போக்குகள் என்ற முதல் அமர்வுக்கு அண்ணாமலைப்பல்கலைக்கழக முன்னாள் மொழியியல் துறைத் தலைவரும் பேராசிரியருமான முனைவர் க.பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார்.சென்னை மொழி அறக்கட்டளை

அகராதித்துறைத் தலைமைப்பதிப்பாசிரியர் முனைவர் பா.ரா. சுப்பிரமணியன் தமிழில் பழைய அகராதிகள் திருத்தப்படாமல் அப்படியே பதிப்பிக்கும் முயற்சியே மேலோங்கியுள்ளது என்பதைக் குறையாகக் குறிப்பிட்டார்.க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி மரபுத்தொடர் அகராதி போன்றவை நல்ல முயற்சிகள் என்றார்.மொழி அறக்கட்டளையில் இரண்டு இலட்சம் சொற்களும் மைசூரிலுள்ள நடுவண் மொழி நிறுவனத்தில் முப்பது இலட்சம் சொற்களும் தொகுக்கப்பட்டுள்ளன என்றார்.

தமிழ் மலையாள அகராதி உருவாக்கம் சிக்கல்களும் தீர்வுகளும் என்ற இரண்டாம் அமர்வு அன்று பிற்பகல் 2மணி முதல் 3.30 வரை தமிழ்ப்பல்கலைக்கழக வளர்தமிழ் அறிவியல் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் இராம.சுந்தரத்தின் தலைமையில் நிகழ்ந்தது. கோழிக்கோடு பல்கலைக்கழக மொழியியல் பேராசிரியர் பி.வேணுகோபாலப் பணிக்கர் அகராதி அமைக்கும்போது காற்று,வாயு போன்ற ஒருபொருட்பன்மொழிகள் வழங்கும் முறைகளை எடுத்து விளக்கும் முறைகளை எடுத்துரைத்தார். கோழிக்கோடு பல்கலைக்கழக மொழியியல் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் ஜி.பாலசுப்பிரமணியன் தமிழிலும் மலையாளத்திலும் காணப்படும் ஒத்த சொற்களை அகராதியில் அமைக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்துக்களை எடுத்துரைத்தார்.

மலையாளம் தமிழ் அகராதி உருவாக்கம் சிக்கல்களும் தீர்வுகளும் என்ற மூன்றாம் அமர்வு அன்று பிற்பகல் 3.45 முதல் 5 மணிவரை சென்னை மொழி அறக்கட்டளை அகராதித்துறைத் தலைமைப்பதிப்பாசிரியர் முனைவர் பா. ரா.சுப்பிரமணியன் தலைமையில் நிகழ்ந்தது. கேரளப்பல்கலைக் கழக மலையாள அகராதித் துறைத் தலைமைப்பதிப்பாசிரியர் முனைவர் பி. வேணுகோபால் தன் கட்டுரையில் மலையாள அகராதியில் தொல்காப்பியம் தொடங்கிய நூல்களிலிருந்து சொற்களை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்றார்.அதே நிறுவனத்தைச் சேர்ந்த தொழில் நுட்ப உதவியாளர் முனைவர் சுபாஷ் நாம் தயாரிக்கும் அகராதி தற்கால மொழிக்கா இலக்கிய மொழிக்கா இவ்வகராதிகள் யாருக்கு என்பன பற்றி தெளிவு தேவை என்றார்.தமிழில் கலைச்சொல் அகராதிகள் தொகுக்கப்படும் முறைகளை எடுத்துரைத்த தமிழ்ப்பல்கலைக்கழக வளர்தமிழ் அறிவியல்தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் இராம.சுந்தரம் இணையத்தில் தமிழ்க்கலைச்சொற்களைத் தொகுக்கும் இணையத் தளம் ஒன்று அமைக்கும் முயற்சி நடந்து வருவது பற்றி எடுத்துரைத்தார்.இதன் மூலம் யாரும் தாம் படைத்த கலைச்சொற்களை அதற்கு அனுப்ப இயலும் ,தரவுத் தொகுப்பை விரிவாக்க இயலும்என்றார்.

கருத்தரங்கின் இரண்டாம் நாள் (24.02.2000) மூன்று அமர்வுகளில் அகராதியியல் தொடர்பான கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன.காலையில் நடந்த நான்காம் அமர்வு சிறப்பு அகராதிகள் பற்றி அமைந்தது.தமிழில் தெசாரஸ் எனப்படும் பொருள் ஒப்புமை அகராதி அமைக்கும் முறை பற்றி

மைசூரிலுள்ள நடுவண் மொழி நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் ஜி. சங்கரநாராயணனும் மலையாளத்தில் அத்தகைய அமைப்பது குறித்து கர்னல் என்.பி.நாயரும் கருத்துரை வழங்கினர்.தொடர்ந்து சங்க இலக்கிய உவமை அகராதி குறித்த கட்டுரையைக் கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் இலா.குளோறியா சுந்தரமதி அவர்கள் வழங்கினார். மலையாளத்தில் கலைச்சொல் அகராதி குறித்தும் அதன் வரலாறு குறித்தும் அமைந்தது திரு.விளக்குடி இராஜேந்திரன் கட்டுரை.இவ்வமர்வுக்குக் கோழிக்கோடு பல்கலைக்கழக மொழியியல் பேராசிரியர் வேணுகோபாலப்பணிக்கர் தலைமை தாங்கினார்.

முற்பகலில் கேரளப்பல்கலைக்கழக மொழியியல் பேராசிரியர் ஆண்ட்ரூஸ் குட்டி தலைமையில் நடந்த ஐந்தாவது அமர்வில் மொழிபெயர்ப்பும் அகராதியும் பற்றி விவாதிக்கப்பட்டது.இவ்வமர்வில் பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம்,அகராதி நூல்கள் பல வெளியிட்டுள்ள பேராசிரியர் மு.ச.சிவம்,மலையாள ஆய்வாளர் மாத்யூ பிலிப்,அண்ணாமலைப்பல்கலைக்கழக முன்னாள் மொழியியல் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியன் ஆகியோர் கட்டுரை வழங்கினர். மலையாள மொழியிலிருந்து தமிழில் பெயர்க்கும் போது எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தமது அண்மை மொழிபெயர்ப்பான ஒரு சங்கீதம் போல என்ற நாவலின் ஒளியில் விவாதித்தார் சிற்பி.தமிழிலிருந்து மலையாளத்திற்குப் பெயர்க்கும்போது எதிர்கொள்ளும் சிக்கல்களை மையமிட்டு அமைந்தது மாத்யூ பிலிப்பின் கட்டுரை.தமது அகராதி நூல்கள் பற்றிய விவரணத்தை வழங்கினார் திரு.மு.ச.சிவம்.திரு.க. பாலசுப்பிரமணியம் பலபொருள் ஒரு சொற்களை தமிழ் மலையாள அகராதிகளில் அமைக்கும்போது எதிர்கொள்ளும் சிக்கல்களை எடுத்துரைத்தார்.

நிகண்டுகள்,சொல்லடைவுகள்,தொடர் அடைவுகள் என்ற ஆறாவது அமர்வு அன்று பிற்பகல் 2முதல் 3.30 வரை முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் தலைமையில் நிகழ்ந்தது.இவ்வமர்வில் கேரளப்பல்கலைப்பேராசிரியர் முனைவர் கி.நாச்சிமுத்து தமிழில் காணப்படும் சொல்லடைவுகள்,ஒத்த வாக்கிய அகராதிகள் இவற்றை மதிப்பிட்டு இவை இன்னும் அகராதி தயாரிப்பாளருக்கு உதவும் வகையில் செப்பம் பெறவேண்டும் என்றார். கேரளப்பல்கலைப்பேராசிரியர்முனைவர் சி.சுப்பிரமணிய பிள்ளை சொல்லடைவு தயாரிப்பதிலும் அச்சிடுவதிலும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பேராசிரியர் வ.ஐ.சுப்பிரமணியம் தலைமையிலும் பின்னரும் கேரளப்பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த பணிகளை விவரித்தார்.தனுவச்சபுரம் வி.டி.எம் .என்.எஸ். எஸ். கல்லூரி முதுநிலைத்தமிழ் விரிவுரையாளர் முனைவர் சி.சாரதா நிகண்டுகளும்

அகராதியியல் கூறுகளும் என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார்.
அன்று பிற்பகல் 3.45 முதல் 4.45 வரை நிகழும் நிறைவுரை விழா பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தமிழ்த்துறைப்பேராசிரியர் சி.சுப்பிரமணிய பிள்ளை வரவேற்புரை யாற்றினார். சென்னை மொழி அறக்கட்டளை அகராதித்துறைத் தலைமைப்பதிப்பாசிரியர் முனைவர் பா.ரா.சுப்பிரமணியன் நிறைவுரையாற்றினார். பேராசிரியர் இராம.சுந்தரம்,மனோன்மணியம் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் பரமசிவம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.தமிழ்த்துறைப் பேராசிரியை காஞ்சனா நன்றியுரை நவின்றார். கருத்தரங்க முடிவில் தமிழ் -மலையாள அகராதியைக் கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் மலையாளத் தமிழ் அகராதியைக் கோழிக்கோடு பல்கலைக்கழக மலையாளத் துறையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் இவ்வகராதிகள் இன்றைய மொழிக்குரிய பொது அகராதிகளாக முதலில் அமையவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.பின்பு இலக்கிய மொழிக்கு அகராதிகள் உருக்கலாம்.முதலில் 5000 சொற்கள் அடங்கிய அகராதியை வெளியிட முயலவேண்டும். மேலும் இதற்கு மைசூர் மொழிகள் நிறுவனம் சென்னை மொழி அறக்கட்டளை ஆகியவற்றில் உள்ள தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் போன்ற பரிந்துரைகளும் வழங்கப்பட்டன.
கருத்தரங்கை ஒட்டித் தமிழ்த்துறை தயாரித்த சொல்லடைவுகள் பொருளடைவுகள் தொடர் அடைவுகள் முதலியன அடங்கிய கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சி.சுப்பிரமணிய பிள்ளை
தமிழ்த் துறை
பேராசிரியர்

காரியவட்டம், திருவனந்தபுரம்
25/02/2000

LIST OF CONTRIBUTORS

1. DR. B.C. BALAKRISHNAN,
D-8, JAWAHAR NAGAR,
Thiruvanathapuram.

2 DR. G. BALASUBRAMANIAN,
Lecturer in Tamil, Dept of Malayalam,
Calicut University, Calicut.

3. DR. GNANASUNDARAM,
Deputy Director,
Central Insitute of Indian Languages,
Manasagangotri,
Mysore-570005

4. DR. MATHAIYAN,
Reader,
Departments of Compilation,
Tamil University, Thanjavur - 613 005

5. DR. MATHEW PHILIP,
Puthuveettil,
Thoppipala P.O.,
Near Kolimala School,
Kottappana,
Idukki District, Kerala

6. DR. K. NACHIMUTHU,
Professor & Head,
Dept. of Tamil,
Dean,Faculty of Oriental Studies,
University of Kerala,
Kariavattom - 695 581.
Thiruvanathapuram.

7. COL. N.B. NAIR,
Anugraham,
7.PTP Nagar,
Thiruvanathapuram-38

8. DR. PREMA NANDAKUMAR,
Mutal Tirumaligai,
91, South Chithirai Veethi,
Sri Rangam - 620 003.
Tiruchirappalli.

9. DR. M. SADASIVAM,
45 Valliyammai Second Street,
Periayavalasu,
Erode - 638 004.

10. DR.G. SANKARANARAYANAN,
Research Officer,
Central Insitute of Indian Languages,
Manasagangotri, Mysore-570005

11. DR. C. SARADA,
Sr. Lecturer in Tamil,
V.T.M.N.S.S. College,
Dhanuvachapuram.

12. DR. SIRPI BALASUBRAMANIAM,
50, Azhkappa Colony,
Pollachi, Coimbatore District.

13. DR. P.R. SUBRAMANIAN,
Editor, Mozhi Trust,
18. Shreenivas Apartment,
Turnbulls First Cross,
Off. Chamiers Road,
Chennai -600 035

14. DR. C. SUBRAMONIA PILLAI,
Professor, Department of Tamil,
University of Kerala,
Kariavattom - 695 581.
Thiruvanathapuram.

15. DR. Rm. SUNDARAM,
Retd. Professor,
1, Singara Thoppu,
South Lane, Madurai-1.

16. DR. T.B. VENUGOPALA PANICKER,
Professor of Linguistics,
Department of Malayam,
Calicut University,
Calicut.

17. MR. VILAKKUDY RAJENDRAN,
Sr. Research Officer,
State Insitute of Languages,
Thiruvanathapuram.

Printed at TACS Computers, Fort, Tvm. ☎ 464706